பக்கங்கள்: 18

விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 15 ஞாயிற்றுக்கிழமை 29.05.2022 கதிர் 205

### இது ரகசியம் அல்ல!

புதிய பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுக்கும் தற்போதைய மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்கவுக்கும் இடையில் லடாய் என்கிறார்கள்.

அது இன்று,நேற்று ஏற்பட்டதல்ல. 2015இல் நல்லாட்சி அரசின் பிரதமராக

☞ 2

# நாணய நிதியம் உதவும் வரை இந்தியா தோள் தர வேண்டும்

## புதுடெல்லியிடம் கொழும்பு கோரிக்கை



புதுடெல்லி,மே28

நெருக்கடியில் சிக்கியிருக்கும் இலங்கையின் பொருளாதாரத்தைத் தூக்கி நிறுத்துவதற்கான உதவித் திட்டங்கள் சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கிட்டும் வரையில் நாட்டின் பொருளாதார நெருக்கடிகளுக்கு ஈடு கொடுப்பதற்கான ஆதரவை, தோள் கொடுக்கும் விதத்தில் இந்தியா தொடர்ந்து வழங்கி உதவ வேண்டும்.

- இவ்வாறு புதுடெல்லி ஆட்சி பீடத்தை கொழும்பு கோரியிருக்கின்றது.

இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொரகொட புதுடெல்லியில் இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனை நேரில் சந்தித்து தமது அரசின் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார் எனத் தெரியவருகிறது.

☞ 03

## 2,220 லீற்றர் எரிபொருள் சுன்னாகத்தில் சிக்கியது!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,மே.29

எரிபொருள்களை பதுக்கல் செய்து விற்பனை செய்த குப்பிளான் மற்றும் ஏழாலைப் பகுதிகளைச் சேர்ந்த இருவரிடம் 2 ஆயிரத்து 220 லீற்றர் எரிபொருள் சுன்னாகம்

☞ 2

## இந்தியா மேலும் ரூ.90 ஆயிரம் கோடிக்கு கடன், கடன் தவணை விட்டுக் கொடுப்பு!

இந்தியாவிடமிருந்து பரஸ்பர பரிமாற்றல் வசதி அடிப்படையில் மேலும் ஒரு பில்லியன் (நூறு கோடி) அமெரிக்க டொலர்களைப் பெற்றுக்கொள்வதற்கான பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும், ஆசிய ஒத்துழைப்பு ஒன்றியத்தின் ஒத்தி வைக்கப்பட்ட ஒதுக்கீடுகளிலிருந்து மற்றுமொரு 1.5 பில்லியன் (நூற்றியைம்பது கோடி )அமெரிக்க டொலர்கள் கிடைக்கப் பெறும் என்று எதிர்பார்ப்பதாகவும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

ஆசிய ஒத்துழைப்பு

☞ 2

## 'ஷொக்' அடிக்கப் போகும் மின் கட்டணம் மூன்று, நான்கு மடங்கு அதிகரிப்பு வரும்!


மின்சாரக் கட்டணம் 300 முதல் 400 வீதம் வரை (அதாவது மூன்று முதல் நான்கு மடங்குகள் வரை) அதிகரிக்கப்படலாம் எனவும், அதிகமாக மின்சாரத்தைப் பாவிக்கும் நுகர்வோருக்கு மின்சாரக் கட்டணங்கள் திருத்தப்பட வேண்டும் எனத் தாம் கருதுகிறார் எனவும் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

குறைந்த வருமானம் பெறுவோர் மற்றும் குறைந்த அலகுகளைப் பாவிக்கும் நுகர்வோரின் கட்டணத்தை அதிகரிக்கவிரும்பவில்லை என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை மின்சார சபை

☞ 2

## வவுனியாவில் இந்தியப் பிரஜை மாடியிலிருந்து வீழ்ந்து மரணம்



வவுனியா நகரில் பஜார் வீதியிலுள்ள வர்த்தக நிலையத்திற்கு முன்பாக நேற்று முன்தினம் இரவு 11.30மணியளவில் தலை சிதறிய நிலையில் வெளிநாட்டவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

தலை சிதறிய நிலையில் இரத்தம் ஓடிய படி ஒருவர்

☞ 2

## ஓய்வின் பின் அரச ஊழியருக்கு ஒப்பந்த நியமனம் இனி இல்லை

ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்களை ஒப்பந்த அடிப்படையில் மீள் நியமனம் செய்வதை மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரச சேவை ஆணைக்குழுவின் அலுவலகம் இது தொடர்பான தீர்மானம் குறித்து அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களுக்கும் அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நிதி அமைச்சின் செயலாளரினால் அரச சேவையின் செலவினங்களைக்

☞ 2

## தமிழக அரசின் நிவாரணப் பொருள்கள் தூத்துக்குடியிலிருந்து காங்கேசனுக்கு!



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,மே.29

தமிழ்நாடு அரசு இலங்கைக்கு அனுப்பும் இரண்டாம் கட்ட நிவாரணப் பொருள்கள் நேற்று தூத்துக்குடி துறைமுகத்திற்கு எடுத்து வரப்பட்டன.

இலங்கையில் நிலவும் கடும் பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கை மக்களிற்காக தமிழ்நாடு அரசு ஏற்கனவே 40 ஆயிரம் மெற்றிக் தொன் நிவாரணப் பொருள்களைக் கொழும்புத் துறைமுகம் வழியாக அனுப்பிய நிலைமையில், இரண்டாம் கட்டப் பொருள்களை காங்கேசன்துறை ஊடாக அனுப்பி வைக்க இந்திய அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதற்காக அந்தப்

☞ 2

## காலிமுகத்திடலில் இருந்து ஜனாதிபதி மாளிகையை நோக்கி முன்னேற முயன்ற ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கண்ணீர்ப் புகை





கொழும்பு காலிமுகத் திடலுக்கு அருகில் உலக வர்த்தக மத்திய நிலையத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் செய்தபடி பொலிஸ் தடுப்புகளை மீறி ஜனாதிபதிமாளிகையைநோக்கி முன்னேற முயன்ற போராட்டக்காரர்களை கலைக்க பொலிஸார் நேற்று முன்னிரவு கண்ணீர் புகைக் குண்டு வீச்சு மற்றும் நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொண்டனர்.

காலிமுகத்திடலில் 'கோட்டா கோ கம' எதிர்ப்புத் தளம் நிறுவப்பட்டு நேற்று ஐம்பதாவது நாள் எட்டிய நிலையில், காலிமுகத் திடலில் இருந்து கூட்டமாகப் புறப்பட்ட

☞ 2

## இனி இது .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ரணில் பதவியேற்ற காலத்தில் ஆரம்பித்ததாம். அப்போதைய அரசுக்கு எதிரான பிணைமுறி ஊழல் விவகாரம் அம்பலமான போது மத்திய வங்கியின் பிரதி ஆளுநராக இருந்தவர் இந்த நந்தலால் வீரசிங்க. அந்த விவகாரம் சூடு பிடித்து, பெரிய சர்ச்சையாக வெடித்தமைக்கு அச்சமயம் பிரதி ஆளுநராக இருந்த நந்தலால் வீரசிங்க அடித்த ஆப்பும் ஒரு காரணம் என்பது அப்போதைய நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க போன்றோரின் எண்ணம்.

இப்போது நிதி அமைச்சராகவும் ரணில் பதவியேற்றதும் மத்தியவங்கி விவகாரங்களும் அவருக்கு கீழே வந்துவிட்டன. இனி என்ன, சந்தர்ப்பம் கிடைத்திருப்பதால் பிரதமர் ரணில் பதில் ஆப்பை மத்திய வங்கி ஆளுநருக்கு ஆழமாக இறக்குவார் என்பதுதான் பலரின் எதிர்பார்ப்பும்.

இதற்கிடையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முந்திக்கொண்டு மத்திய வங்கி ஆளுநரைப் பாராட்டி மதிப்பளிக்கும் அறிவிப்பு ஒன்றைக் கசிய விட்டிருக்கின்றார்.

புதிய ஆளுநர் பதவியேற்றுக் குறுகிய காலத்துக்குள் இதுவரை நிலவிய நிதி நெருக்கடியை கட்டுப்படுத்தவும், தணிக்கவும் காத்திரமான நடவடிக்கை எடுத்திருக்கிறார் என்று மெச்சிய ஜனாதிபதி கோட்டாபய, எந்த ஓர் அரசியல் தலையீடும் இன்றி தொடர்ந்து மத்திய வங்கியின் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் முழு ஆதரவு அளிக்கும் என்பதையும் உறுதிப்படுத்தியிருக்கிறார்.

மத்திய வங்கி ஆளுநர் தொடர்பில் பிரதமர் ரணிலின் நகர்வுக்கு'செக்' வைக்கும் விதத்தில் இந்த அறிவிப்பை ஜனாதிபதி வெளியிட்டிருக்கின்றார் என்று நினைத்தேன். அதனை எனது தென்னிலங்கை ஊடக நண்பர் ஒருவருக்கு என் கருத்தாகச் சொன்னேன்.

அவர் விழுந்து விழுந்து சிரித்தார்.

"உங்களுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சுபாவம் இன்னும் விளங்கவில்லை. அந்த மனிதர் எந்த நேரமும் எதுவும் சொல்வார், எப்படியும் பல்டி அடிப்பார். நாட்டின் மோசமான நிதி நிலைவரங்களுக்கு அப்போதைய மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால்தான் காரணம் என்று பல்வேறு தரப்பினரும் குற்றம் சுமத்திய போது, திடீரென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஒரு அறிக்கை வெளியிட்டார். மத்திய வங்கி ஆளுநர் கப்ரால் மிகத் திறமையாக செயற்படுகின்றார் என்றும், அவர் மீது தமக்கு முழு நம்பிக்கை உள்ளது என்றும் அந்த அறிக்கையில் கூறியிருந்தார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ. அந்த அறிக்கை வெளியாகி அதன்மை காய்வதற்குள் – அடுத்த பத்து நாள்களுக்குள் – வெளிநாட்டுப் பயணம் ஒன்றில் இருந்த கப்ராலுக்கு ஒரு செய்தி வந்தது ஜனாதிபதி பக்கத்திலிருந்து – மத்திய வங்கி ஆளுநர் பதவியை உடனடியாக ராஜினாமாச் செய்யும்படி. பத்து நாளைக்கு முன்னர் தான் கொடுத்த நற்சான்று பத்திரத்தை குப்பையில் தூக்கி போட்டுவிட்டு முடிவெடுத்தார் ஜனாதிபதி கோட்டாபய" – என்று சுட்டிக்காட்டினார் அந்த நண்பர்.

நிதியமைச்சின் முன்னாள் செயலாளரும், திறைசேரியின் தலைவராக இருந்தவருமான பி.பி.ஜயசுந்தரதான் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியான போது அவரின் செயலாளர். ஜனாதிபதியின் செயலாளராக இருந்து கொண்டே பி.பி.ஜயசுந்தர திறைசேரி, மத்திய வங்கி, நிதி அமைச்சு எல்லாவற்றிலும் தலையிட்டு கையடித்தார். அவை எல்லாவற்றுக்கும் இடமளித்து அங்கீகரித்தார் கோட்டாபய.

இப்போது பி.பி.ஜயசுந்தர என்றால் பிடித்துதின்னும் கோபத்தில் இருக்கின்றார் நாட்டின் தலைவர்.

அதுபோலவே இப்போதைய மத்திய வங்கி ஆளுநருக்குப் பாராட்டுப் பத்திரம் வழங்கும் ஜனாதிபதி, நாளைக்கே அவருக்குத் தூற்றல் பத்திரம் பாட மாட்டார் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை என்றார் அந்த நண்பர்.

அது மட்டுமல்ல, இப்போது பிரதமர் ரணிலைப் புளுகும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ திடீரென பிளேட்டைப் புரட்டிப் போட்டு, அவரைத் திட்டிக் கலைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்றார் என் ஊடக நண்பர்.

* * *

என்னுடைய உள்ளூர் நண்பர் ஒருவர் நேற்று தொலைபேசி அழைப்பு எடுத்தார்.

"உங்கள் நண்பர் சுமந்திரனும், அவரின் சீடர் சாணக்கியனும் ரணிலை இந்த அளவுக்கு போட்டுப் பிடிக்கிறார்களே.. ஏன்? விசேட காரணம் ஏதும் உண்டா? ரணில் அவர் நண்பர்தானே?" – என்று வினவினார்.

நான் என் மனதில் பட்ட காரணத்தைச் சொன்னேன்.

அவர் 'கனகச்சிதமான விளக்கம்' என்று பாராட்டினார்.

அப்படி அவருக்கு நான் என்ன சொன்னேன்?

விவரத்தை நாளை பார்ப்போமா நண்பர்களே....?

**- மின்னல் -**

## 2,220 லீற்றர் எரிபொருள் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டது.

பொலிஸ் விசேட படையணியின் தகவலின் அடிப்படையில் சுன்னாகம் பொலிஸாரால் நேற்று இது தொடர்புல் இருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இருவரிடமும் இருந்து மண்ணெண்ணெய் ஆயிரத்து 670 லீற்றர், பெற்றோல் 310 லீற்றர், டீசல் 240 லீற்றர் என்பன கைப்பற்றப்பட்டு உள்ளன.

## இந்தியா மேலும் ரூ.90 ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஒன்றிணைவின் கீழ் இறக்குமதிகளுக்காக இலங்கையால் இந்தியாவிற்குச் செலுத்தப்பட வேண்டியுள்ள 1.5 பில்லியன் அமெரிக்க டொலர்களையே இந்தியாமேற்கண்டவாறு ஒத்திவைத்துள்ளது.

இலங்கையைச் சேர்ந்த இறக்குமதியாளர்கள் ஒவ்வொரு இரு மாதங்களுக்கும் இந்தியாவிற்குச் செலுத்த வேண்டிய 50 கோடி அமெரிக்க டொலர்களை மத்திய வங்கிக்குச் செலுத்துகின்றனர்.

அவ்வாறு செலுத்தப்படும் கொடுப்பனவுகளை இந்தியா பெறுவதை ஒத்திவைப்பதற்கு இந்தியா இணங்கியுள்ளது என்று மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கு மேலதிகமாக இந்தியாவிடமிருந்து பரஸ்பர பரிமாற்றல் வசதி அடிப்படையில் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களைப் பெற்றுக்கொள்வதற்குத் திட்டமிட்டிருப்பதாகவும், இருப்பினும் இது இன்னமும் கலந்துரையாடல் மட்டத்திலேயே காணப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்தியாவினால் எரிபொருள் கொள்வனவிற்காக கடனடிப்படையில் 50 கோடி அமெரிக்க டொலர்கள் வழங்கப்பட்டதாகவும் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்போதைய திட்டத்தின் கீழ் இந்தியா இப்போது வழங்கக் கூடிய 2.5 பில்லியன் கடன் உதவியின் இலங்கைப் பெறுமதி சுமார் 90 ஆயிரம் கோடி ரூபாவாகும்.

## 'ஷொக்' அடிக்கப் போகும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தொடர்ச்சியாக கட்டணத் திருத்தத்தைக் கோரிய போதிலும், ஒன்பது வருடங்களுக்கு மேலாக கட்டணங்கள் திருத்தப்படவில்லை என்று குறிப்பிட்ட அவர்,பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவும் இது தொடர்பில் சில முன்மொழிவுகளை முன்வைத்துள்ள போதிலும் இதுவரை எந்தத் திட்டமும் அங்கீகரிக்கப்படவில்லை என்றார்.

கருணைக் காலம் வழங்கப்பட்டதன் பின்னர், அமைச்சரவை மற்றும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அனுமதியுடன் இந்தத் திருத்தத்தை நடைமுறைப்படுத்த எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

கட்டணங்கள் திருத்தப்பட்டால், கணிசமான அளவு அதிக மின் அலகுகளைப் பயன்படுத்தும் சில ஹோட்டல்கள், தொழிற்சாலைகள் மற்றும் அதிக மின்சாரம் பயன்படுத்தும் வீடுகளுக்கு 300 முதல் 400 வீதம் மின் கட்டணத்தை அதிகரிக்க முடியும் என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## ஓய்வின் பின் அரச .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கட்டுப்படுத்துவதற்காக அண்மையில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பொதுமக்களின் பணத்தை சிக்கனமாக பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தைக் கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்களை ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் பணியமர்த்துவதற்கான விண்ணப்பங்களை மறு அறிவித்தல் வரை சமர்ப்பிக்க வேண்டாம் என அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களுக்கும் பொதுச் சேவை ஆணைக்குழுவின் அலுவலகம் அறிவுறுத்தியுள்ளது.

இனிமேல், அரச துறையில் வெற்றிடமாக உள்ள பணியிடங்களைத் தற்போதைய அதிகாரிகள் மூலம் நிரப்புவதில் கூடுதல் கவனம் செலுத்துமாறு அரச சேவை ஆணைக்குழு அலுவலகம் உத்தரவிட்டுள்ளது.

## தமிழக அரசின் நிவாரணப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பொருள்கள் தூத்துக்குடித் துறைமுகத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

அந்த நிவாரணப் பொருள்களை அனுப்பும் நடவடிக்கையை தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் டாக்டர் கே.செந்தில்ராஜ் நேற்று நேரில் சென்று ஆய்வு செய்தார்.

இப் பொருள்கள் அடுத்த சில நாள்களில் காங்கேசன்துறை துறைமுகத்திற்கு எடுத்து வரப்படவுள்ளன

## காலிமுகத்திடலில் இருந்து ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆர்ப்பாட்டப் பேரணியை பக்கத்தில் கொழும்பு உலக வர்த்தக மையத்துக்கு அருகில் வைத்துத் தடுப்புகளைப் போட்டு பொலிஸார் வழிமறித்தனர்.

தடுப்புகளை உடைத்துக் கொண்டு ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆவேசமாக இலங்கை வங்கி மாவத்தைக்குள் முன்னேற முயன்ற போதே பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டு வீச்சு மற்றும் நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொண்டு கூட்டத்தைக் கலைத்தனர்.

இந்தப் பாதைகளில் ஊர்வலம் செல்வதற்கு தடை விதிக்கும் உத்தரவை பொலிஸார் ஏற்கனவே கொழும்புக் கோட்டை நீதிவான் நீதிமன்றில் பெற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

யோர்க் வீதி, பாங்க் வீதி மற்றும் சத்தம் வீதி உட்பட சில வீதிகளுக்குள் ஆர்ப்பாட்டக்காரர்கள் நுழைவதற்கு நீதிமன்றம் தடை விதித்திருந்தது.

## வவுனியாவில் இந்தியப் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
காணப்பட்ட நிலையில், அதனை அவதானித்த சிலர் அவரை மீட்டு வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதித்தனர். எனினும் அவர் முன்பதாகவே உயிரிழந்து விட்டார் என வைத்தியர்கள் தெரிவித்தனர்.

இந்நபர் வர்த்தக நிலையம் ஒன்றின் மேற்பகுதியில் விடுதி அமைந்துள்ள மூன்றாம் மாடி கட்டடத்திலிருந்து கீழே வீழ்ந்து மரணித்துள்ளார் என விசாரணைகளின் ஆரம்ப கட்டத்தில் தெரியவந்துள்ளது. இந்நபரின் மரணம் கொலையா, அல்லது தற்கொலையா என்பது குறித்துப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்

இந்தியா நாட்டை சேர்ந்த 36 வயதுடைய சன்டிப் மலிக் என்ற நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

தடவியல் பொலிஸாரின் உதவியுடன் மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு –
தொலைபேசி இலக்கம்-
076 443 8622




| மணமகன் விபரம் | மணமகன் விபரம் |
|---|---|
| பிறந்த திகதி : 10.06.1987<br>ஜாதி: V ஆண்<br>மதம் : இந்து<br>கல்வி தகைமை : Msc Engineer<br>எதிர்பார்ப்பு : கனடா அல்லது அவுஸ்திரேலியா மணமகள் | பிறந்த திகதி : 27.12. 1989<br>மதம் : இந்து<br>ஜாதி : V பெண் செவ்வாய் குற்றமுடையவர்<br>கல்வி தகைமை : MBA<br>தொழில்: கனடா பிரஜை<br>எதிர்பார்ப்பு : கனடா மணமகன் |
| பிறந்த திகதி : 26.09.1990<br>ஜாதி: N ஆண்<br>மதம் :இந்து<br>நட்சத்திரம் : திருவோணம் 2 ல் செவ்வாய்<br>கல்வி தகைமை : Bsc தொழில் : அரச உத்தியோகத்தா<br>எதிர்பார்ப்பு : அழகான மணமகள் | பிறந்த திகதி : 3.11.1995<br>மதம் : இந்து<br>ஜாதி : V பெண்<br>கல்வி தகைமை: University<br>எதிர்பார்ப்பு : வெளிநாட்டு மணமகன் |
| பிறந்த திகதி: 11.08.1994<br>ஜாதி: P செவ்வாய் குற்றமுடையவர்<br>எதிர்பார்ப்பு : ஒரே குலத்தை சோந்த அழகிய மணமகள் | பிறந்த திகதி : 01.01.1992<br>மதம் : இந்து .<br>ஜாதி : Pபெண்<br>கல்வி தகைமை: NCAT.<br>எதிர்பார்ப்பு : உள்ளூர் அரச சேவை மணமகன் |
| பிறந்த திகதி: 1981.04.25<br>ஜாதி: V ஆண்<br>மதம் : இந்து<br>கல்வி தகைமை : A/L<br>தொழில்: சொந்த தொழில்<br>எதிர்பார்ப்பு : ஜரோப்பிய நாட்டு இலங்கை தமிழ் பெண் | பிறந்த திகதி : 17.05.1998<br>மதம் : இந்து .<br>ஜாதி ::P பெண் செவ்வாய் குற்றமுடையவர்<br>கல்வி தகைமை: AL<br>எதிர்பார்ப்பு :உள்நாடு – வெளிநாட்டு மணமகன் |

கனடா - 011 4166661855
011 4377728129
யாழ்ப்பாணம் - 077 887 6969
077 650 5097

# நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை அகற்றும் சாக்கில் 13 நீக்கும் சதித் திட்டம்

## அனைத்து தமிழ், முஸ்லிம் கட்சிகளுக்கும் மனோ எச்சரிக்கை



மாகாணசபை முழுமையான அதிகார பரவலாக்கல் தீர்வல்ல. ஆனால், குறைந்தபட்சமாக இருக்கும் அதையும் வெட்டிக்குறைக்க வேண்டுமென சிங்கள கட்சிகள் கூறுகின்றன. அதேபோல் குறைந்தபட்சமாக தமிழ், முஸ்லிம் பிரதிநிதிகளை நாடாளுமன்றம், மாகாணசபைகள் ஆகியவற்றுக்குச் செல்ல வழிகாட்டும் விகிதாசார தேர்தல் முறைமையையும் மாற்ற வேண்டும் என்ற குரல்கள் தெற்கில் எழுகின்றன. இது தொடர்பில் தமிழ் பேசும் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகள் விழிப்பாக இருக்க வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் அனைத்து தமிழ், முஸ்லிம் கட்சிகளுக்கும் அறைகூவல் விடுத்துள்ளார்.

மனோ எம்பி மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

21 ஆம் திருத்தம் என்று சொல்லி, நிறைவேற்று ஜனாதிபதி முறையை அகற்றினால், 13 ஆம் திருத்தம், தேர்தல் முறை ஆகியவையும் மாற வேண்டும் என இங்கே பலர் சொல்லத் தொடங்கி உள்ளார்கள்.

தென்னிலங்கை சிவில் சமூகத்துக்கு நல்லாட்சி, சுயாதீன குழுக்கள், நீதிமன்ற சுதந்திரம், ஊடக சுதந்திரம், ஊழல் எதிர்ப்பு போன்ற பல்வேறு முன்னுரிமை பிரச்சினைகள் தொடர்பாக தேசிய கோரிக்கைகள் உள்ளன. இவற்றை நாங்களும் கடுமையாக ஆதரிக்கின்றோம். அதில் மாற்று கருத்துக்கு இடமில்லை.

ஆனால், எங்களது முன்னுரிமை பிரச்சினைகள் வேறு. ஒரே நாட்டுக்குள் வடக்கு, கிழக்கில் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு அதிகார பகிர்வு, மலையகத்தில் அதிகார பகிர்வு, தோட்ட குடியிருப்புகளை தேசிய நிர்வாக வலையமைப்புக்குள் கொண்டு வரல், மொழி உரிமை, மத வழிபாட்டு உரிமை, அகழ்வாராய்ச்சி, வனம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களங்கள், மகாவலி அதிகாரசபை ஆகியவற்றின் மூலம் வட - கிழக்கில் காணி பிடிப்பு, பௌத்த மயமாக்கல், பயங்கரவாத தடுப்பு சட்டம், அரசியல் கைதிகள், காணாமல் போனோர்... என்று பல்வேறு பிரச்சினைகள் உள்ளன.

தேசிய கோரிக்கைகளை ஆதரிக்கும் அதேவேளை எமது பிரச்சினைகளையும் நாம் களத்துக்குக் கொண்டு வர வேண்டும். எமது பிரச்சினைகளுக்கு நாம் முன்னுரிமை கொடுக்க வேண்டும்.

எனவேதான், ஜனாதிபதி முறைமையை முழுமையாக அகற்றுகிறீர்களோ, இல்லையோ, 13 ஆம் திருத்தம், தேர்தல் முறை இவற்றில் கைவைக்க ஒருபோதும் இணங்க மாட்டோம். இருப்பதையும் இழக்க இணங்க மாட்டோம். பழைய பிரச்சினையை தீர்க்கப் போய், புது பிரச்சினைகளை உருவாக்காதீர்கள் என்று நேற்று நான் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற அனைத்து கட்சி தலைவர்கள் கூட்டத்தில் உரக்கக் கூறினேன்.

இந்த நிலைப்பாட்டுடன் உடன்படும்படி, அனைத்து தமிழ், முஸ்லிம் கட்சிகளையும், அக்கட்சி தலைவர்களையும், எம்.பிக்களையும் தமிழ், முஸ்லிம் அரசியல் ஆய்வாளர்களும், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களும், முன்னாள் மாகாணசபை உறுப்பினர்களும், கட்சி உறுப்பினர்களும் வலியுறுத்த வேண்டும். - என்றார்.

## 240 லீற்றர் பெற்றோலுடன் ஒருவர் வசமாக சிக்கினார்



240 லீற்றர் பெற்றோலுடன் 50 வயது நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பதுளை மாவட்டம், மடூல்சீமை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிட்டமாறுவை பகுதியில் வியாபார நிலையத்தில் அதிக விலைக்குப் பெற்றோல் விற்பனை செய்யப்படுகின்றது எனப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது. இதையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப் பின்போது, கொள்கலன்களில் இருந்து மொத்தமாக 240 லீற்றர் பெற்றோல் மீட்கப்பட்டுள்ளது. கைதானவர், பிட்டமாறுவ பகுதியைச் சேர்ந்தவராவார்.

குறித்த சந்தேகநபர் பதுளை நீதிவான் முன்னிலையில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளார்.

## பொருளாதார மாநாடு நடத்த ரணில் திட்டம்!



இலங்கையில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார நெருக்கடி நிலைமையைச் சமாளித்து, அரசியல், பொருளாதார ஸ்திரத் தன்மையை ஏற்படுத்துவதற் கான முயற்சியில் தீவிரமாக இறங்கியுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அதற்கான வழிமுறைகள் பற்றியும் ஆராய்ந்து வருகின்றார்.

இதன்படி உலக நாடுகளின் ஒத்துழைப்பு மற்றும் முதலீடுகளை பெறும் நோக்கில் 'பொருளாதார மாநாடு' ஒன்றை நடத்துவதற்குப் பிரதமர் திட்டமிட்டுள்ளார்.

இடைக்கால வரவு - செலவுத் திட்டத்தை முன்வைப்பதற்கு முன்னர் இது தொடர்பான அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகும் எனத் தெரியவருகின்றது.

இலங்கையில் பொருளாதார மறுசீரமைப்பு இடம்பெற்றால், உதவி களை வழங்குவதற்கும், முதலீடுகளை செய்வதற்கும் தயார் என வெளிநாட்டு நிறுவனங்கள்கூட அறிவித்துள்ளன. எனவே, இடைக்கால வரவு - செலவுத் திட்டத்தின் பொருளாதார மறுசீரமைப்பு திட்டங்களும் முன்வைக்கப்படவுள்ளன.

அதேபோல நன்கொடையாளர் மாநாடு, சுற்றுலாத்துறை மாநாடு உள்ளிட்ட ஏற்பாடுகளும் இடம்பெற வுள்ளன என்று தெரியவருகின்றது.

## நாணய நிதியம் உதவும் வரை ....................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேச நாணய நிதியத்துடனான இலங்கையின் பேச்சுகளில் இணக்கப்பாட்டினை எட்டும் வரை அத்தியாவசிய பொருள்கள் கொள்வனவு, எரிபொருளுக்கான கடன் மற்றும் கடன் மீள் செலுத்தலை ஒத்திவைத்தல் உள்ளிட்டவற்றில் இந்தியாவின்தொடர்ஒத்துழைப்புக்களை எதிர்பார்ப்பதாக தூதுவர் மிலிந்த மொரகொட நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை டெல்லியில் இடம்பெற்ற இச்சந்திப்பின் போது தெரிவித்துள்ளார்.

இதன் போது இலங்கை எதிர்கொண்டுள்ள கடுமையான பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதற்கு டெல்லி வழங்கும் உதவிகளை மேலும் அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து அவதானம் செலுத்தப்பட்டது.

சர்வதேச நாணய நிதியத்துடன் பொருளாதார சீர்திருத்தத் திட்டம் தொடர்பான பேச்சு நடத்தப்பட்டு இறுதி செய்யப்படும் வரை இலங்கைக்கான இணைப்பு நிதி உதவிகள் தேவைப்படுவதாக தூதுவர் மொரகொட நிதி அமைச்சர் சீதாராமனிடம் தெரிவித்தார்.

இலங்கையில் நிலவும் நெருக்கடியான இந்தச் சூழலில், அத்தியாவசிய பொருள்கள், எரிபொருளுக்கான கடன்கள் மற்றும் கொடுப்பனவுகளின் இருப்பு போன்ற பல வடிவங்களில் இந்தியா வழங்கும் உதவிகளை அதிகரிப்பது மற்றும் மறுசீரமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் தொடர்பில் இதன் போது இரு தரப்பும் அவதானம் செலுத்தப்பட்டது.

இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் பொருளாதார உதவிகள் தொடர்பில் பேச்சுகளை நடத்துவதற்காக நிறுவப்பட்ட உத்தியோகபூர்வ பொறிமுறை தொடர வேண்டும் என்று இரு தரப்பும் ஒப்புக்கொண்டன.

உணவு மற்றும் எரிபொருளைக் கொள்வனவு செய்வதற்கான கடன் வரிகள், நாணயப் பரிமாற்றம் மற்றும் கடனைத் திருப்பிச் செலுத்துவதை ஒத்திவைத்தல் உட்பட இந்த ஆண்டின் தொடக்கத்தில் இருந்து இந்தியாவினால் இலங்கைக்கு சுமார் 3 பில்லியன் டொலர் மதிப்பிலான பொருளாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இரு நாடுகளுக்குமிடையிலான பொருளாதார ஒத்துழைப்பை மதிப்பீடு செய்து, முன்னோக்கி செல்லும் வழி குறித்தும் இதன்போது அவதானம் செலுத்தப்பட்டது. கடந்த ஏப்ரல் நடுப்பகுதியில் இடம்பெற்ற சந்திப்பின் தொடர்ச்சியாகவே இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது. அத்தியாவசியப் பொருப்கள் மற்றும் எரிபொருளுக்கான கடன்கள் உள்ளிட்ட விடயங்களில் இந்தியா இலங்கைக்கு வழங்கிவரும் உதவிகளுக்கு தூதுவர் நன்றி தெரிவித்தார்.

ஏப்ரல் மாதம் வொஷிங்டனில் நடைபெற்ற சர்வதேச நாணய நிதியத்தின் கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பில் இந்தியா விசேட கரிசனையை வெளிப்படும்மியமைக்கும் தூதுவர் மொரகொட நன்றி தெரிவித்தார்.

## எழுதுமட்டுவாழில் கைக்குண்டு மீட்பு



யாழ்., கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எழுதுமட்டுவாழ் பகுதியில் துர்க்கை அம்மன் ஆலய வீதியில் உள்ள தனியார் காணி ஒன்றில் வெடிக்காத நிலையில் கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் கைக்குண்டு ஒன்று காணப்படுகின்றது என இராணுவத்தினருக்கு நேற்றுமுன்தினம் கிடைத்த தகவலின் அடிப்படையில் கைக்குண்டை மீட்பதற்கான நட வடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## சூடு கண்டும் அடுப்பங்கரை நாடுவதா?

**எந்தளவு தூரம் பட்டு அனுபவித்தாலும், சிங்களத் தலைவர்கள் திருந்தப் போவதில்லை.**

**யாரிடமாவது, எந்த வட்டி வீதத்திலாவது, எத்தகைய நிபந்தனையின் பேரிலாவது, கடனை வாங்கி, இன்றைய – இப்போதைய – நெருக்கடியைத் தீர்த்தால் சரி, நாளை பற்றி சிந்திக்கத் தேவையில்லை என்பதுதான் இந்தத் தலைவர்களின் எண்ணப்போக்கு போலும்.**

**'சூடு கண்ட பூனை அடுப்பங் கரை நாடாது' என்பார்கள். ஆனால், பொருளாதார நெருக்கடி சிங்களத் தலைவர்களை சூடு கண்ட இடத்தையும் நாட வைக்கின்றது.**

**சீனாவிடம் மீளவும் உதவி, கடன் போன்றவற்றைப் பெற இலங்கை முயல்வது, இந்தியாவுடனான இலங்கையின் உறவைக் குழப்பாது என்று கூறும் பிரதமர் ரணிலின் கருத்தும் –**

**மேலதிக உதவிகளுக்கும் கடனுக்கும் சீனாவையும் நாடுவோம் என்ற அவரது கூற்றும் –**

**இலங்கைத் தலைவர்கள் இவ்வளவு பட்டு அனுபவித்த பின்னரும் திருந்தப் போவதில்லை என்பதைத்தான் வெளிப்படுத்தி நிற்கின்றன.**

**இந்த நெருக்கடி சமயத்தில் இடுக்கண் களையும் நட்பு போல அயல் தேசமான இந்தியா விரைந்து வந்து பல்வேறு உதவிகளையும் வாரி வழங்கியது. இயன்ற வரைத் தொடர்ந்தும் உதவுவதற்கு முன் நிற்கின்றது**

**ஆனால் நாட்டின் முன் நகர்வுக்கு இந்திய உதவி மட்டுப்படுத்தப்பட்டது என்று கூறும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, மேலும் உதவிகளுக்கு ஜப்பானையும் சீனாவையும் நாடத் தாம் எண்ணி இருக்கின்றார் எனத் தமது திட்டத்தைக் கட்டவிழ்க்கின்றார்.**

**அங்குதான் பிரதமர் ரணில் வரலாற்றுத் தவறை இழைக்கின்றார் எனத் தோன்றுகின்றது.**

**ஏற்கெனவே இந்திய பிரதமர் நரேந்திர மோடியும் ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடாவும் இலங்கைக்குக் கூட்டுச் சேர்ந்து உதவுவதற்குத் திட்டமிட்டு இணங்கியிருக்கிறார்கள்.**

**இந்தப் பிராந்தியத்தில் சீனாவின் காலூன்றலையும் மேலாதிக்கத்தையும் அமெரிக்கா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுடன் 'குவார்ட்' என்ற கட்டமைப்பை ஏற்படுத்தி, முகம்கொடுத்து முறியடிக்க இந்தியாவும் ஜப்பானும் முயன்று வருகின்றன.**

**இந்தப் பின்புலத்தில் "இந்தியாவின் தேசியப் பாதுகாப்புக்குக் குந்தகம் ஏற்படுத்தாத வகையில் நாம் நடந்து கொண்டால் அது இலங்கை –இந்திய உறவைப் பாதிக்காது" என்று சீனாவை நாடும் தமது திட்டத்திற்கு நியாயம் கற்பிக்கின்றார் – சமாதானம் கூறுகின்றார் – பிரதமர் ரணில்.**

**ஆனால் இலங்கைக்கு சீனா கடன் மற்றும் உதவிகளை வாரி வழங்க முன்வருவது, தனது கடன் பொறித் திட்டங்களுக்குள் இலங்கையை மாட்ட வைத்து, அதன் மூலம் இலங்கையில் காலூன்றி, ஆதிக்கம் செலுத்துவதற்குத்தான் என்பதும், அது இந்தியாவினதும் மட்டுமல்லாமல், ஜப்பான், அமெரிக்கா, ஆஸ்திரேலியா போன்றவற்றினதும் நலனுக்கும் எதிரானது என்பதையும் பிரதமர் ரணில் உணர்ந்து கொள்ள வேண்டும்.**

**சீனாவுக்கு இலங்கை ஏற்கனவே கொடுக்க வேண்டிய 350 கோடி டொலர் கடன் நிலுவையை மீளச் செலுத்துவது குறித்தான மாற்று ஒழுங்கு முறைமை பற்றி பேச மறுத்து, கடன் நிலுவையை முழுமையாகச் செலுத்த வேண்டும் என்று ஒற்றைக்காலில் அடம் பிடித்து நின்று, அறுவடை செய்த சீனா, மீண்டும் கடன் வழங்க வருகின்றது என்றால் அதன் பின்னால் பொதிந்திருக்கும் சூழ்ச்சியை – சூத்திரத்தை – பிரதமர் ரணில் புரிந்து கொள்ளாமல் இருக்க முடியாது.**

**அவசரத்துக்கு வெட்கம், தவறு, நியாயம் பார்க்காமல் கைநீட்டும் இந்தப் பண்பியல்பு மிக மோசமான விளைவுகளை நாட்டுக்கு தரும்.**

# பிரதமர் ரணிலின் முதல் பலி மத்திய வங்கியின் ஆளுநர்!

### நளின் பண்டார வெளியிட்ட தகவல்



புதிய நிதியமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் முதல் பலி தற்போதைய மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்கவே என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவியேற்றதன் பின்னர் பொருளாதார நெருக்கடி தொடர்பில் மத்திய வங்கி ஆளுநருடன் ஒரு போதும் கலந்துரையாடவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு பேசிய அவர் இதனைக் கூறியுள்ளார்.

தொடர்ந்தும் பேசிய அவர் -

ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவியேற்று 10 நாள்களுக்கு மேல் ஆகிவிட்டது. இந்தக் காலப்பகுதியில் மத்திய வங்கி ஆளுநரைப் பிரதமர் எப்போதாவது சந்தித்தாரா? என்பது எமக்குத் தெரியாது. மத்திய வங்கியின் ஆளுநருக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் பாரிய முரண்பாடு காணப்படுகின்றமை எமக்குத் தெரியும்.

2015 இற்கு பிறகு நடந்த சம்பவங்களுடன் தொடர்புடையதாக பல தகவல்கள் உள்ளன. ஏனெனில் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க பிணைமுறி கொடுக்கல் வாங்கலின் போது பிரதி ஆளுநராக இருந்தார். பிணை முறி ஒப்பந்தத்தை கடுமையாக எதிர்த்தவர்களில் கலாநிதி நந்தலாலும் ஒருவர்.

அதனால்தான் கடந்த இரண்டு வாரங்களாக ரணில் விக்கிரமசிங்க மத்திய வங்கியுடன் இணைந்து பணியாற்றவில்லையா? இன்று நிதியமைச்சராகப் பதவியேற்றுள்ள ரணில் விக்கிரமசிங்கவின் மத்திய வங்கியின் கொள்கைகள் என்ன? கலாநிதி நந்தலால் வீரசிங்கவை எவ்வாறு கையாள்வது? தற்போதைய நிதியமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் முதல் பலியாக நந்தலால் வீரசிங்க இருப்பாராகள் என்ற கேள்வி எம் உள்ளங்களில் கேள்விக்குறியாக உள்ளன.

மத்திய வங்கி போன்ற ஒரு நிறுவனம் அரசியலில் இருந்து விடுபட்ட சுதந்திரமான நிறுவனமாக இருக்க வேண்டும் என்பதை நாங்கள் மரியாதையுடனும் பொறுப்புடனும் கூறுகிறோம் - என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# எரிவாயு விநியோகிக்க இராணுவ உதவிகள்!

### மறுக்கும் யாழ். அரசாங்க அதிபர்



எரிவாயு விநியோகஸ்தர்களால் இடையூறு ஏற்படுத்தப்படும் என்பதால் இராணுவத்தினரின் உதவியைப் பெற ஆலோசிக்கப்படுவதாக வெளியான செய்தியில் எவ்வித உண்மையும் இல்லையென யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

கடந்த வெள்ளிக்கிழமை சில அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களில் வெளியிடப்பட்ட 'எரிவாயு கொள்கலன்களை இராணுவத்தினரின் உதவியுடன் விநியோகிக்க நடவடிக்கை' என்ற தலைப்பிலான செய்தியிலே, 'எரிவாயு விநியோகஸ்தர்களால் இடையூறு ஏற்படுத்தப்படும் என்பதால் இராணுவத்தினரின் உதவியினைப் பெற ஆலோசிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படும் கூற்றில் எவ்வித உண்மைத்தன்மையும் இல்லை என்பதுடன், அது தவறான செய்தியாகும்.

மேலும் யாழ்ப்பாண மாவட்டத்தில் எரிவாயு விநியோகஸ்தர்கள் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்துடன் இணங்கி செயற்படுவதற்கும், விநியோக நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவும் தங்களது இணக்கப்பாட்டை 25.05.2022 ஆம் திகதியன்று மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற பிரதேச செயலாளர்களுடான கலந்துரையாடலில் தெரிவித்தனர்.

மாவட்ட செயலகத்துடன் எரிவாயு விநியோகஸ்தர்கள் ஒத்துழைத்து செயற்பட்டு வருகின்றனர் என்பதையும் மாவட்ட செயலகம் தெரிவித்துக்கொள்கின்றது. - என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# 'கொரோனா வீட்டுக் கதைகள்' நூல் பற்றிய கலந்துரையாடலும் நாளை திங்கட்கிழமை

திருமறைக் கலாமன்றத்தின் இலக்கிய அவையின் ஏற்பாட்டில் புலம்பெயர் எழுத்தாளர் மனோ சின்னத்துரை அவர்களின் 'கொரோனா வீட்டுக் கதைகள்' நூல் பற்றிய கலந்துரையாடலும், ஆசிரியருடனான சந்திப்பும் நாளை 30 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 4.00 மணிக்கு இல.128,டேவிற் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

கவிஞரும் எழுத்தாளருமான சி.கருணாகரன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் நூலிலுள்ள கதைகள் குறித்த உரைகளை தி.செல்வமனோகரன், நா.நவராஜ், வனிதா சேனாதிராஜா, சி.ரமேஷ் ஆகியோர் வழங்கவுள்ளார்கள். பதிலுரையை நூலாசிரியர் மனோ சின்னத்துரை வழங்குவார்.

ஆர்வமுள்ள அனைவரையும் இந் நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

# வட இலங்கை செய்தியாளர் பணி விபரக் கையேடு

மேற்படி கையேட்டை, பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் மற்றும் யாழ். ஊடக அமையம் இணைந்து வெளியிடவுள்ளன.

இதில் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி - முல்லைத்தீவு - வவுனியா - மன்னார் ஆகிய மாவட்டங்களில் அச்சு - மின் - இணையம் ஆகிய ஊடகங்களில் 1980 முதல் பணியாற்றிய - பணியாற்றுகின்ற செய்தியாளர்கள் உள்ளடக்கப்படுவர்.

படத்துடன் தகவல்களை தபால் மற்றும் மின்னஞ்சலில் 30 யூன் 2022 க்கு முன் அனுப்ப வேண்டிய முகவரி

**கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள்,**
**பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்,**
**இலக்கம் 891,**
**ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

மின்னஞ்சல்: **rmpillai01gmail.com**







## மணமகன் விபரம்

பிறந்த திகதி-16.04.1985
மதம்-இந்து
ஜாதி-V ஆண்
நட்சத்திரம்-சதயம் 4
கி.பா-9
செவ்-12ல்
தகைமை-B.SC,M.SC
தொழில்-U,S,A,PR (SOFTWARE ENG)
எதிர்பார்ப்பு- பட்டதாரி மணமகள் (U,S,A) இலங்கை

---

பிறந்த திகதி-21.01.1993
மதம்-இந்து
ஜாதி-V ஆண்
நட்சத்திரம்-பூராடம் 3
கி.பா-41
செவ்-2ல்
தகைமை-CIVIL ENG
தொழில்-SINGAPORE
எதிர்பார்ப்பு- CANADA PR, UK பட்டதாரி மணமகள்

---

பிறந்த திகதி-20.11.1990
மதம்-இந்து
ஜாதி-V ஆண்
நட்சத்திரம்-மூலம் 2
கி.பா-44
செவ்-6ல்
தகைமை-G.C.E A/L
தொழில்-SWISS PR
எதிர்பார்ப்பு- A/L படித்த மணமகள்

---

பிறந்த திகதி-27.02.1990
மதம்-இந்து
ஜாதி-V ஆண்
நட்சத்திரம்-உத்தரட்டாதி(1)
கி.பா-63
செவ்-1ல்
தகைமை-NETWORK ENG
தொழில்-NETWORK ENG
எதிர்பார்ப்பு- பட்டதாரி SINGAPORE இலங்கை மணமகள்

---

பிறந்த திகதி-14.04.1995
மதம்-இந்து
ஜாதி-V ஆண்
நட்சத்திரம்-அத்தம்
கி.பா-57
செவ்-1ல்
தகைமை-B.COM
தொழில்-COMPANY
எதிர்பார்ப்பு- அரசசேவை மணமகள்

---

பிறந்த திகதி-25.03.1993
மதம்-இந்து
ஜாதி-V ஆண்
நட்சத்திரம்-அச்சுவினி 3
கி.பா-46
செவ்-8ல்
தகைமை-I.T DIPLOMA
தொழில்-STATION MASTER
எதிர்பார்ப்பு- பட்டதாரி மணமகள்

---

பிறந்த திகதி-13.11.1991
மதம்-இந்து
ஜாதி-V ஆண்
நட்சத்திரம்-உத்தராடம் 4
கி.பா-14
செவ்-சூரி2ல்
தகைமை-I.T.SOFT WARE ENG
தொழில்- COMPANY COLOMBO
எதிர்பார்ப்பு- ENG,DOCTOR மணமகள்

---

பிறந்த திகதி-25.11.1988
மதம்-இந்து
ஜாதி-V ஆண்
நட்சத்திரம்-மிருகசீரிடம் 2
கி.பா-53
செவ்-2ல்
தகைமை-ELECTRONIC ENG
தொழில்-COMPANY உரிமையாளர்
எதிர்பார்ப்பு- படித்த மணமகள்

## மணமகள் விபரம்

பிறந்த திகதி-31.08.1991
மதம்-இந்து
ஜாதி-V பெண்
நட்சத்திரம்-கார்த்திகை (1)
கி.பா-15
செவ்-10ல்
தகைமை-ACCOUNTANT
தொழில்-AUSTRALIA PR
எதிர்பார்ப்பு- AUSTRALIA பட்டதாரி மணமகன்

---

பிறந்த திகதி-04.09.1992
மதம்-R.C
ஜாதி-V பெண்
நட்சத்திரம்-கேட்டை
கி.பா-8
செவ்-3
தகைமை-HOTEL MANAGER
தொழில்-COMPANY
எதிர்பார்ப்பு- வெளிநாடு

---

பிறந்த திகதி-12.04.1991
மதம்-இந்து
ஜாதி-V பெண்
நட்சத்திரம்-பூரட்டாதி 2
கி.பா-27 v2
செவ்-1ல்
தகைமை-B.SC IT
தொழில்- COMPANY
எதிர்பார்ப்பு- U.K. CANADA , FRANCE, SINGAPORE மணமகன்

---

பிறந்த திகதி-10.04.1987
மதம்-இந்து
ஜாதி-V பெண்
நட்சத்திரம்-மகம்
கி.பா-7
செவ்-5ல்
தகைமை-M.B.B.S
தொழில்- DOCTOR
எதிர்பார்ப்பு- DOCTOR மணமகன் தேவை

---

பிறந்த திகதி-09.08.1985
மதம்-இந்து
ஜாதி-V பெண்
நட்சத்திரம்-அச்சுவினி
கி.பா-35
செவ்-சூரி 5
தகைமை-M.B.B.S
தொழில்- DOCTOR
எதிர்பார்ப்பு- DOCTOR ENG மணமகன்

---

பிறந்த திகதி-03.09.1992
மதம்-இந்து
ஜாதி-V பெண்
நட்சத்திரம்-விசாகம் 4
கி.பா-20
செவ்-12ல்
தகைமை-M.B.B.S
தொழில்- DOCTOR
எதிர்பார்ப்பு- DOCTOR மணமகன்

---

பிறந்த திகதி- 02.11.1991
மதம்-இந்து
ஜாதி-V பெண்
நட்சத்திரம்-பூரம் 3
கி.பா-10
செவ்-11இல்
தகைமை-DENTAL DOCTOR
தொழில்- DENTELDOCTOR
எதிர்பார்ப்பு- U,S,A, CANADA UK, SINGAPORE

---

பிறந்த திகதி-30.12.1993
மதம்-இந்து
ஜாதி-V பெண்
நட்சத்திரம்-புனர்பூசம் 2
கி.பா-44
செவ்-சூரி4ல்
தகைமை-B.A
தொழில்- அரசசேவை
எதிர்பார்ப்பு- அரசசேவை UK CANADA மணமகன்

Australia, Canada, UK, USA,Swiss, Germany, Italy, France, Newzeland- இந்த நாடுகளில் Visa உள்ளவர்கள் இல்லாதவர்கள் மணமகன் மணமகள் விபரம் தந்தால் திருமணம் நிறைவேற்றித் தருவோம்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இம் மாங்கல்யா பகுதியில் மணமக்கள் விபரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.













கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=



# மருத்துவக் கதிர்



# பூண்டின் மருத்துவ பயன்கள்



நாம் அன்றாட சமையலில் பயன்படுத்தும் அத்தனை பொருள்களும் ஏதோ ஒரு வகையில் நம் ஆரோக்கியத்துக்கு உதவி புரிகின்றன என்று உணர்ந்துதான் நம் முன்னோர்கள் உணவு முறையையும் வாழ்க்கை முறையையும் அமைத்து கொடுத்தார்கள். அப்படி அவர்கள் அதிகம் பயன்படுத்திய உணவு பொருளில் முக்கியமான ஒரு பொருள் பூண்டு.

பூண்டு பெரும்பாலும் எல்லா சமையலிலும் பயன்படுத்தப்படுகிறது பூண்டில் விற்றமின்கள் A , B1, B2, B 6, பொற்றாசியம், மக்னீசியம், பொஸ்பரஸ், கல்சியம், இரும்பு,அயடீன், சல்பர், குளோரின் புரதம் உள்ளிட்ட சத்துக்கள் நிறைந்துள்ளன.

பூண்டுகளில் ஒருதலை பூண்டு, மலை பூண்டு, தரை பூண்டு, நாட்டு பூண்டு, தாய்வான் அல்லது சைனா பூண்டு என்று பல வகைகளில் உண்டு.இதை பச்சையாக சாப்பிட்டாலும் அதிக நன்மை கிடைக்கும்.

உடலில் நோயெதிர்ப்பு சக்தி குறைந்தால் உடல் சோர்வு, உடல் பலவீனம், மனச் சோர்வு போன்றவை ஏற்படும்.

பூண்டு மிகுந்த நோய் எதிர்ப்புச்சக்தியை அளிக்கிறது. இதனால் உடலும் மணமும் புத்துணர்ச்சி அடைகிறது.இரத்த அழுத்தத்திற்கான அறிகுறிகளில் இருந்து நிவாரணம் தருவதாக ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளது.

தாய்ப்பால் அதிகம் சுரக்க சுரக்க பூண்டை வேகவைத்து பாலில் கலந்து சாப்பிடுவார்கள். பாலில் பூண்டை ஊறவைத்து சாப்பிட்டால் தாய்ப்பால் சுரப்பு அதிகரிப்பதோடு, குழந்தைக்கும் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்.

வியர்வையை பெருக்கும், உடற்சக்தியை அதிகப்படுத்தும், தாய்ப் பாலை விருத்தி செய்யும், சளியை கரைத்து, சுவாச தடையை நீக்கும், ஜீரண சக்தியை அபிவிருத்தி செய்யும், ரத்த கொதிப்பை தணிக்கும், உடல் பருமனையும், ரத்தத்தில் உள்ள கொழுப்பையும் குறைக்கும்.

புற்றுநோயைத் தடுக்கும் சக்தி பூண்டுக்கு உண்டு. மேலும் புற்றுநோய் பாதிப்பால் ஏற்படக்கூடிய புண்களுக்கு மருந்து மாத்திரைகள் சாப்பிடும் போது அதனுடன் ஒரு பூண்டையும் சேர்த்து சாப்பிட்டு வந்தால் புண்கள் விரைவாக ஆறும்.

பச்சை பூண்டை சாப்பிட்டால், கல்லீரல் மற்றும் சிறுநீர்ப்பை சரியாக செயல்படும் மற்றும் வயிற்று பிரச்சினைகளும் நீங்கும். குறிப்பாக அஜீரணம் மற்றும் பசியின்மை போன்றவை நீங்கும். பச்சைப் பூண்டு மன அழுத்தத்தையும் கட்டுப்படுத்த உதவும்.

இதய அடைப்பை நீக்கும், நீரிழிவு நோயாளிகளின் சர்க்கரை அளவைக் குறைக்கும், ஆண்களின் ஹார்மோன் உற்பத்தியை பெருக்கி, வீரியம் அதிகரிக்கச் செய்யும். பூண்டில் உள்ள ஈதர், நுரையீரல், நுரையீரல் குழாய் மற்றும் முகத்தில் அமைந்துள்ள சைனஸ் குழிகளில் படிந்திருக்கும் கெட்டியான சளியை இளக்கி வெளியேற்றி விடும்.

மலேரியா, யானைக்கால், காசநோய்க் கிருமிகளுக்கு எதிராக செயல்படும். மாதவிலக்குக் கோளாறுகளை சரி செய்யும். நோய்க் கிருமிகளை அழிக்கும் திறன் கொண்டது. சீரான ரத்த ஓட்டத்துக்கு உதவும். மூட்டு வலியைப் போக்கும். வாயுப்பிடிப்பை நீக்கும். ரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்தும். தினமும் இரண்டு பல் பூண்டு சாப்பிட்டு வந்தால், நோய் எதிர்ப்பு சக்தி அதிகமாகும்.

சர்க்கரை நோய்க்கான மாத்திரைகள் சாப்பிட்டும் கட்டுக்குள் வராமல் இருப்பவர்கள் வெறும் வயிற்றில் பூண்டு சாப்பிட்டு வந்தால் உடலின் இன்சுலின் சுரப்பு அதிகரித்து சர்க்கரை நோய் கட்டுக்குள் வரும்.

உடல் நலன் ஆரோக்கியமாக இருக்க ஆறுமாதங்களுக்கு ஒருமுறை வயிற்றில் இருக்கும் கழிவு மற்றும் பூச்சுகளை வெளியேற்ற வேண்டும். அதற்கு மருந்து, மாத்திரைகளை விட துரிதமாக பக்க விளைவுகள் எதுவுமின்றி வெளியேற்ற உதவுகிறது பூண்டு.

உள்நாக்கு வளர்தலுக்கு வெள்ளைப் பூண்டை இஞ்சி சாறுவிட்டு அரைத்து கொஞ்சம் தேனும் கலந்து காலை, மாலை என இரண்டு வேளையும் உணவுக்கு முன், இரண்டு தேக்கரண்டி சாப்பிட்டு வரவும். இவ்விழுதை தொண்டையின் வெளியே பூசி வர வேண்டும்.

பச்சைப் பூண்டை வெறும் வயிற்றில் சாப்பிட்டால், இரத்த அழுத்தம் அதிகரிப்பது குறைந்து, இதய நோய் வருவது தடுக்கப்படும். ஒரு டம்ளர் பாலுடன் ஒரு டம்ளர் தண்ணீர், பத்து மிளகு, சிறிது மஞ்சள் பவுடர், ஒரு பூண்டின் உரித்த முழுப் பற்கள் ஆகியவற்றைக் கொதிக்க வைத்து, ஒரு டம்ளர் ஆனவுடன் வடிகட்டி அப்பாலை அருந்த வேண்டும்.

ருசிக்காக ஆசைப்பட்டு எண்ணெயில் பொரித்த தின்பண்டங்களை அதிகமாகச் சாப்பிட நேர்ந்தால், உடனே இரண்டு பச்சைப் பூண்டுப் பற்களை எடுத்து சிறிது சிறிதாகக் கடித்து சாப்பிட செரிமானத்தன்மை ஏற்படும். பூண்டு உடல் உஷ்ணத்தை அதிகப்படுத்தக் கூடியது. அதிகளவில் பயன்படுத்தினால் நீர்க்கடுப்பு, நீர் எரிச்சல் உண்டாகும்.

வயிற்றில் புழுக்கள் இருந்தால், அதனை வெளியேற்ற, தினமும் ஒரு பச்சைப் பூண்டை வெறும் வயிற்றில் காலையில் சாப்பிட்டு வந்தால், உடலில் உள்ள நச்சுக்கள் அனைத்தும் வெளியேறி, புழுக்களும் வெளியேறிவிடும்.

பூண்டை பச்சையாக சாப்பிடுவதால் சிலருக்கு அலர்ஜியை ஏற்படுத்தும். அதுவும் உடலில் கொப்புளங்கள் வருவது, உடலின் வெப்பநிலை அதிகரிப்பது, தலை வலி ஏற்படுவது போன்றவை இருந்தால், உடனே பூண்டை பச்சையாக சாப்பிடுவதை தவிர்த்திடுங்கள்.

ஒரு நாளைக்கு 1 – 2 பல் பூண்டு சாப்பிடுவது நல்லது.ஆனால் இந்த பூண்டை சமைத்து சாப்பிடுவதை விட பச்சையாக மென்று சாப்பிட்டால், அதன் முழுமையான பலனையும் நாம் பெறலாம்.

வாயுத்தொல்லை உள்ளவர்கள் வெள்ளை பூண்டு பனைவெல்லம் சேர்த்து சாப்பிட்டால் வாயுக் கோளாறு நீங்கும். அல்லது பசும்பாலில் பூண்டை வேகவைத்து சாப்பிட்டால் நல்ல பலன் கிடைக்கும்.

மார்புச்சளி உள்ளவர்கள் கால் டீஸ்பூன் கடுகு, மூன்று வெள்ளைப்பூண்டு இரண்டையும் தேங்காய் எண்ணெயில் சேர்த்து காய்ச்சி வடிகட்டி நெஞ்சுப் பகுதியில் தடவி வந்தால் மார்புச்சளி நீங்கும்.

மூன்று மிளகு, சிறிதளவு பூண்டு இவற்றை ஒன்றாக சேர்த்து அரைத்து காலையில் வெறும் வயிற்றில் உட்கொண்டால் உடல் பருமன் குறையும்.

நல்லெண்ணெயில் பூண்டு பத்து பல் சேர்த்து காய்ச்சி ஆற வைத்து அதன்பின் அந்த எண்ணையை சிறிதளவு காதுகளில் விட்டால் காது வலி குணமாகும்.

இரத்தத்தில் நச்சுக்கள் சேரும் போது உடல் ஆரோக்கியத்தில் குறைபாடு ஏற்படும். அவ்வாறானவர்கள் பூண்டை உணவில் சேர்த்துக் கொண்டால் இரத்தத்தில் இருக்கும் நச்சுக்கள் வெளியேறுவதோடு உடலில் உள்ள தேவையற்ற கொழுப்பையும் கரைத்து சிறுநீர் வழியாக வெளியேற்றுகிறது.

காயத்தை சுத்தம் செய்த பின்னர் வெள்ளைப்பூண்டு சுண்ணாம்பு இரண்டையும் சம அளவில் எடுத்து மை போல் அரைத்து காயத்தின் மேல் வைத்துக் கட்டி வந்தால் விரைவில் குணமாகும்.

இருமல், மூச்சுத்திணறல், மலக் கிருமிகளினால் ஏற்படும் தொற்று போன்ற பிரச்சினைகள் உள்ள 3 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு வெள்ளைப் பூண்டினை அரைத்து மிகவும் சிறிது அவர்களது நாக்கில் தடவினாலே போதும். நிவாரணம் கிடைக்கும்.காது இரைச்சல், காதில் சீழ் வடிதல் போன்றவற்றையும் குணப்படுத்தும்.

இடுப்பு மற்றும் வயிற்றுப் பகுதிகளில் வாய்வு பிடிப்பு ஏற்படுகின்றது. இதனைச் சீர்செய்ய பூண்டு சிறந்த மருந்தாக பயன்படுகின்றது. பிரசவத்தை திரியின் ஆகாரத்துடன் நிறைய வெள்ளைப் பூண்டு சேர்த்து வந்தால் வியாதி எதுவும் வராது. குழந்தைக்கும், தாய்க்கும் நல்ல ஜீரண சக்தி உண்டாகும். இரத்தம் சுத்தமடையும். தாய்ப்பால் அதிகம் சுரக்கும்.

தோல் நீக்கிய வெள்ளைப் பூண்டை எடுத்து நன்றாக இடித்து சாறு பிழிந்து தினசரி காலையில் உட்கொண்டு வந்தால் பூரணமாகக் குணமாகும்.

இரவில் தூக்கமின்மையை சீர்செய்கிறது. தூங்குவதற்கு முன்பு மூன்று வெள்ளைப் பூண்டை பசும்பாலில் போட்டு காய்ச்சி குடித்தால் நல்ல தூக்கம் கிடைக்கும்.

வெள்ளைப்பூண்டு, வசம்பு, நாயுருவி இலை, நாயுருவி வேர் நான்கையும் சம அளவில் எடுத்து வாயில் போட்டு அடக்கிக் கொள்ள வேண்டும்.

உள்நாக்கு அழற்சி ஏற்படும் போது சுத்தமான தேனில் பூண்டை உரித்து ஊறவைத்து சாப்பிட்டால் உள்நாக்கு அழற்சி குணமாகும்.

இதயக் கோளாறை கட்டுப்படுத்தும். பூண்டை பொடியாக நறுக்கி பாலுடன் சேர்த்து உட்கொண்டால் பலன் கிடைக்கும்.

தேங்காயெண்ணெயையில் உரித்த வெள்ளைப்பூண்டை அம்மியில் வைத்து நைத்து அதில் போட்டு பூண்டு நன்றாக சிவந்து வரும் இறக்கி வைத்துவிட்டு, ஆறியபிறகு வடிகட்டி வாய்வுப் பிடிப்பு உள்ள இடத்தில் விட்டு நன்றாகத் தேய்க்க வேண்டும். இந்தவிதமாக அடிக்கடிச் செய்து வந்தால் வாய்வுப் பிடிப்புக் குணமாகும்.

பூண்டு பற்களை வெள்ளாட்டுப் பாலில் போட்டு வேக வைத்து சாப்பிட்டு வந்தால் நீர்க்கடுப்பு, சீதபேதி இரண்டுமே குணமாகும்.

# குடல் புண்




உடலுக்கென்றே தனி கடிகாரம் இயங்குகிறது. அந்தந்த நேரத்திற்கு தகுந்தாற்போல் உடல் உள்ளுறுப்புகள் செயல்படும். சரியான நேரத்திற்கு அமிலம் சுரக்கும். அந்த சமயத்தில் வயிற்றில் உணவில்லையென்றால் அது வெறும் வயிற்றில் பரவி, குடலின் சுவர்களை அரிக்கத் தொடங்கும்.

இதனைத் தவிர்த்து வேறு காரணங்களாலும் வயிற்றுப் புண் உண்டாகும். புகைபிடிப்பவர்களுக்கு, புகையிலை பயன்படுத்துபவர்களுக்கு, வாயுக் கோளாறினால் அவதிப்படுபவர்களுக்கு, அதிக ஸ்ட்ரெஸினால் இருப்பவர்களுக்கு, காலை உணவை தவறு விடுபவர்களுக்கு, எப்போதும் சுயிங்கம் மெல்பவர்களுக்கு, என இவர்களுக்கெல்லாம் அல்சர் தாக்கும் ஆபத்து உள்ளது.

வேலைக்குச் செல்லும் ஆண்கள் மற்றும் பெண்கள் பலர், காலை உணவைச் சாப்பிடத் தவறுவதால், பலரும் வயிற்றுப் புண் பிரச்சினையால் பாதிக்கப்படுகின்றனர்.

இந்த நோயின் முதல் அறிகுறி நெஞ்சுப் பகுதியில் எரிச்சல் ஏற்படுவதுதான். இதைத் தொடர்ந்து அடிக்கடி புளித்த ஏப்பம் உண்டாகும். பசி இல்லாமல் இருக்கும். குறைந்த அளவு உணவைச் சாப்பிட்ட உடனேயே, வயிறு நிரம்பிவிட்ட உணர்வு உண்டாகும். பிறகு, வயிற்றில் வலி தோன்றும். அத்துடன் வாந்தியும் வரும்.

## வயிற்றுப்புண்ணின் வகைகள்

1. வாயிலிருந்து இரைப்பைக்கு செல்லுகிற வழியில் உணவுக்குழாயில் தோன்றும் ஒரு விதமானது.

2. இரைப்பை கீழ்ப்பகுதி மேற்பகுதி என இரண்டாகப் பிரித்து வழங்கப்படுகிறது. இரைப்பைக்குச் செல்லும் உணவை சமிபாட்டையச் செய்து, சமிபாடடைந்த பகுதியையும் முன் சிறுகுடலுக்கு அனுப்பும் தொழிலில் ஈடுபட்டிருப்பது இரைப்பையின் கீழ்ப்பகுதிதான். இது கீழ்வயிறு என்று குறிக்கப்படும். கீழ் வயிற்றில் தோன்றும் புண் ‘காஸ்டிரிக் அல்சர்’ எனப்படும்.

3. இரைப்பை ஏதேனும் ஒரு காரணத்தில் சேதமடைவதுண்டு. அது சேதமடைதால் இரைப்பையின் மேற்பகுதியில் புண் தோன்றுவதுண்டு. உணவுப் பாதையில் தோன்றும் கீழ் வயிற்றுப் புண் வேறு. மேல் வயிற்றுப்புண் வேறு. இரண்டும் வேறு வேறு காரணங்களால் தோன்றுகின்றன.

4. சிறு குடல் மிக நீளமானது. வளைந்து வளைந்து இருப்பதனால் அது மிகச்சிறிய இடத்தில் அடங்கி இருக்கின்றது.

சிறுகுடலின் முன்பகுதி வயிற்றை அடுத்து இருக்கிறது. இது வடிவில் ஆங்கில எழுத்து U போன்றது.

இந்த முன்பகுதி ஆங்கிலத்தில டுயோடனம் எனப்படும். இங்கு ஏற்படும் புண்ணைத் தான் முன் சிறுகுடல் புண் என்கிறோம்.

இரைப்பையில் சுரக்கும் காஸ்ட்ரிஜூஸ் என்னும் புளிப்புள்ள ஒரு செரிப்பு நீரின் கோளாறினால் கீழ் வயிற்றுப் புண்ணும், முன் சிறுகுடல் புண்ணும் தோன்றுகின்றன.

இந்த ஒற்றுமை பற்றி இரண்டும் பெப்டிக் அல்சர் என வழங்கப்படுகிறது. புளிப்புள்ள திரவம் அல்லது நீர் பொருள் அமிலம் (Acid) பெப்டிக் என்ற ஆங்கில சொல்லுக்கு ஜீரணிக்கின்ற என்பது பொருள்.

பெப்ஸிஸ் என்ற கிரேக்கச் சொல்லுக்கு ஜீரணம் என்பது பொருள். அந்தச் சொல்லில் இருந்து திரிந்ததே பெப்டிக் என்ற சொல்.

ஜீரணமாகாத கோளாறினால் ஏற்படும் ஆறாத புண்ணையே அல்சர் என்கிறோம்.

# RADIANT DAWN

A Sunday Supplement in English to Kalaikkathir

Page I English for all Sunday the 29th of May 2022


We welcome students' articles in word for publication

-Editor-

kalaikkathiredu@gmail.com

# My Favourite day




Hi, my name's Bella and Saturday is my favourite day because there is no school. When it's a nice, sunny day I usually go to the park to play with my friends. Can you see me on the swings? A boy called Adam is next to me, Tom is cycling on the path, Jenny and Sara are also on the *path talking. Tom's big brother, Jack is playing with a boat and his friend Yusuf is feeding his dog.

My best friends, Maria and Sally are playing with a ball, Maria has black hair. We have lots of fun at the park. When it's raining or cold, we go to the swimming pool or to one of our houses. In the afternoon, three of us, Maria, Sally and me go to a Gymnastics club. It's great fun but you do have to be careful when you do the movements. I love Saturdays when I can meet my friends and do anything I want.

### *Answer True or False*

Bella's favourite day is Sunday .................

On Saturday's she meets her friends in the park............

Tom is playing football ...................

Tom is playing with his boat...........

Jack and Yusuf are brothers ...............

Yusuf is feeding his dog .............

Bella is playing ball .................

Maria and Sally are her best friends...............



# Going Fishing



### Read the story then answer the questions.

I love to go fishing. I like to sit by the lake in the sun. I have a long fishing rod and a hook on the end of it. I have to put some food on the end of the hook. If the fish like the food they will bite it and I can catch them. If I catch a fish I can take it home to eat for dinner. I don't catch fish every time I go to the lake, but that is ok it is still fun to try. At the weekend my dad comes fishing with me, he can catch a lot of fish!

1. Can you answer the questions in full sentences?
2. What do you need to go fishing?
3. What does he do with the fish he catches?
4. Who goes fishing with him on Saturday and Sunday?
5. Why do you put food on the end of the hook?

# THE TOMATO STORY

***Read the story below.***



"Have another tomato, Johnny," said Grandma, I think you like tomatoes. "I do," said Johnny."Didn't you like tomatoes when you were little, Grandma?" Johnny asked, "No," Grandma said, "but that was because I was a big girl before I ever tasted one."I can remember it so well. One morning peddler came, and said to my mother, 'I've brought you some seeds." He said, "The fruit is bright red. You can't eat eat the fruit." "One day, my uncle came from New York. He said, 'what fine tomatoes you have! And then he showed mother how to get some ready for supper. And that was my first taste of tomato, Johnny," Grandma said.

### Answer each question.

1. What does Johnny like?

a. Apple b. Tomato c. Banana

2. What did the peddler give to Grandma's mother?
3. What did he tell about the seeds?
4. What is the name of that bright red fruit?
5. Do you like tomato?

**Not in doing what you like, but in liking what you do is the secret of happiness. J.M.Barrie**

# The Role of Accounting in Business and Why It's Important

The term accounting is very common, especially during tax season.

But before we dive into the importance of accounting in business, let's cover the basics – what is accounting?

Accounting refers to the systematic and detailed recording of financial transactions of a business. There are many types, from accounting for small businesses, government, forensic, and management accounting, to accounting for corporations.

### Why Is Accounting Important?

Accounting plays a vital role in running a business because it helps you track income and expenditures, ensure statutory compliance, and provide investors, management, and government with quantitative financial information which can be used in making business decisions.

There are three key financial statements generated by your records.

The income statement provides you with information about the profit and loss

The balance sheet gives you a clear picture on the financial position of your business on a particular date.

The cash flow statement is a bridge between the income statement and balance sheet and reports the cash generated and spent during a specific period of time.



It is critical you keep your financial records clean and up to date if you want to keep your business afloat. Here are just a few of the reasons why it is important for your business, big or small!

### It Helps in Evaluating the Performance of Business

Your financial records reflect the results of operations as well as the financial position of your small business or corporation. In other words, they help you understand what's going on with your business financially. Not only will clean and up to date records help you keep track of expenses, gross margin, and possible debt, but it will help you compare your current data with the previous accounting records and allocate your budget appropriately.

### It Ensures Statutory Compliance

Laws and regulations vary from state to state, but proper accounting systems and processes will help you ensure statutory compliance when it comes to your business.

The accounting function will ensure that liabilities such as sales tax, VAT, income tax, and pension funds, to name a few, are appropriately addressed.

### It Helps to Create Budget and Future Projections

Budgeting and future projections can make or break a business, and your financial records will play a crucial role when it comes to it.

Business trends and projections are based on historical financial data to keep your operations profitable. This financial data is most appropriate when provided by well-structured accounting processes.

### It Helps in Filing Financial Statements

Businesses are required to file their financial statements with the Registrar of Companies. Listed entities are required to file them with stock exchanges, as well as for direct and indirect tax filing purposes. Needless to say, accounting plays a critical role in all these scenarios.

# Does how you dress actually matter?



Does dressing professionally actually matter? Shouldn't people respect me for my ideas, not my clothes?

As much as you might not want to admit it, how you dress matters. Not just to other people, either. To you, too.

If you've ever started a big day trying on a dozen or more outfits only to end up wearing the first thing you put on, and still not really feeling great about it, then you already know that your clothes can play a big part in your mood. Of course, what you wear also has an effect on how other people perceive you, but did you also know that your clothing can change how you think?

If you're new here, I'm Missy of Simplified Wardrobe, an Ethical Personal Stylist & Capsule Wardrobe Curator. I help ambitious, eco-conscious womxn who want to look great, feel confident, and simplify their lives.

Find more information about personal style, capsule wardrobes, and color analysis over on Instagram. You can also download my free 10-page Guide to Defining your Personal Style.

Here are 5 ways the way you dress actually makes a big difference:

### #1 Mental Energy

No matter how serenely your morning begins, things can start to go sideways as soon as you open your closet doors. This common experience can induce panic that starts you off on the wrong foot and cause anxiety that sticks with you for the rest of the day.

Whether you start the morning frazzled, stressed, and disheveled, in an outfit that doesn't do anything for you or calm, confident, and put together in an outfit that makes you feel confident and in control depends on what's hanging in your closet.

When you stare blankly into a jam-packed closet and think "I have nothing to wear" this is called the Paradox of Choice. It's a psychological phenomenon that basically means when you have too many choices, you become paralyzed and have a hard time making a decision.

But the difficulty to make a choice isn't even the worst part. As the number of choices grows, we become less satisfied with the options and we're more likely to be dissatisfied with the decisions we do make. That means the more clothes are hanging in your closet, the less confident you'll feel no matter what you put on.

Our brains can only handle so many decisions per day before they stop functioning at their peak. Do you really want to waste all of your brain power on getting dressed in the morning?

This is why Steve Jobs famously wore a black turtleneck, jeans, and tennis shoes everyday. Barack Obama stated that he has 2 colors of suits and a few basic shirts and ties that he can mix-and-match so he doesn't ever have to think about what to wear in the morning.

Streamlining your closet, creating a strategic wardrobe, and developing outfit formulas or uniforms can save you precious mental energy that will allow you to save the brain power for more important decisions.

### #2 Enclothed Cognition

I'm sure you've noticed during the shelter in place, it's really easy to stay in your pajamas all day, but I know at least for me, when I actually take the time to put on real clothes and even do a little hair and makeup, I feel way better, I'm more productive, and I'm not worried that someone might want to have an impromptu Zoom call.

What we wear really affects our mindset and our confidence. In fact, you've also probably read a lot of "Working from home productivity tips" that tell you to get dressed every morning just like you normally would. That's because changing your outward appearance signals to your brain "okay, now the work day has started."

Your clothes not only affect your productivity and overall confidence, but scientists at Northwestern University found that the clothes you wear can change the way you think. In one study, subjects had to perform tests while wearing a lab coat like medical doctors wear, a coat like painters wear, or neither coat.

They found that subjects' sustained attention increased while wearing the doctors' coats in a way that their attention did not increase while wearing the painters' coats or neither coat. The lab coat itself made the subjects feel more like a doctor and therefore behave more like a doctor would behave.

I'm sure you've felt this before, too. When you're really polished and dressed to the nines, you feel more confident and prepared for the task.

### #3 Creative Thinking

A series of studies shows that the formality of your clothing influences your decision making.

In a series of experiments, students wearing their normal clothes performed a series of standardized tests. Students wearing more formal clothing showed stronger inclinations towards abstract processing.

And in another experiment, participants were randomly assigned to change into either their formal or their casual clothes and then given a test on strategic thinking. Participants wearing more formal clothing focused on the big picture, whereas students wearing their street clothes got stuck more in the details.

So you can use your executive-level clothing to prime your brain for executive-level thinking.

### #4 Authenticity

Another way that clothing can affect your psyche is when your clothing matches, or doesn't match, your internal self. When you feel like you're truly expressing yourself, you feel calmer, more purposeful, and more confident.

When you feel like you're hiding who you are that has a psychological affect. When you dress authentically, you'll not only feel more confident in yourself, but you'll also attract like-minded people. And you know what they say, "You are the product of the people you spend the most time with." Consider: who do you want to be?

### #5 Perception

Of course, style is not just about feeling confident. Other people notice how you dress, too. What you wear shows people how you view yourself, and it's the first thing anyone notices when you step into a room.

You might think you're showing your dedication to your work by not caring about your clothing, but what you're actually showing is you don't take it or yourself seriously. If a client, manager, or co-worker has a bad experience with you, that's one thing. But, sometimes, a they might have a great experience with you but still not refer you for a promotion, a new client, or an opening at their new company because just as much as your style is a representation of you, if they vouch for you, you are a representation of them and their company.

The way you present yourself will reflect back on them, so make sure that you're always presenting yourself in a way that would make you an asset, not a liability.

Style is just one of many tools we can use to put our best foot forward. I happen to think it's the most fun, but even if you're not a "fashion person," you can strategically curate your wardrobe to feel more confident, increase your brain power, and earn the right kind of reputation so you can be successful.






## குட்டிக் கதை ஒன்று படித்துப் பாருங்கள்

# மனிதநேயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு!



அமெரிக்காவில், சிகாகோ நகரத்தில் சர்வ சமயப் பேரவை நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு சுவாமி விவேகானந்தர் இந்துமதம் பற்றிச் சொற்பொழிவுகள் செய்தார். அவர் அமெரிக்கா செல்வதற்கு முன்பு, இந்தியாவின் பல பகுதிகளுக்கும் சென்றார். அப்போது அவர் பிரபலமாகவில்லை. அந்த நிலையில் ஒரு சமயம் விவேகானந்தர் ஓர் ஊரில் தங்கினார். அவரைப் பார்ப்பதற்கு மக்கள் கூட்டம் கூட்டமாக வந்தார்கள். அவர் அவர்களிடம் தொடர்ந்து பேசிக்கொண்டே இருந்தார். இந்த நிகழ்ச்சியைப் பற்றிப் பிற்காலத்தில் சுவாமி விவேகானந்தர் இவ்விதம் கூறியிருக்கிறார் நம்புவதற்கே உங்களுக்குக் கடினமாகத்தான் இருக்கும்.

ஆனால் மூன்று நாள்கள் இரவும் பகலும் எனக்கு ஒரு விநாடிகூட ஓய்வே கிடைக்கவில்லை. தூக்கம், உணவு எவையும் அறவே எனக்கு இல்லாமற் போய்விட்டன. யாரும் அதைப் பற்றிக் கவலைப்படவும் இல்லை. மக்கள் வந்துகொண்டே இருந்தார்கள். நானும் அவர்களுடன் பேசிக்கொண்டே இருந்தேன். மூன்றாம் நாள் இரவு வந்தது. அநேகமாக எல்லோரும் அங்கிருந்து சென்றுவிட்டார்கள். நான் மட்டும் தனியாக இருந்தேன். அப்போது தாழ்ந்த சாதியைச் சேர்ந்த, செருப்புத் தைக்கும் தொழிலாளி ஒருவன் என்னிடம் வந்தான்.

அவன் என்னிடம், சுவாமிஜி! நீங்கள் மூன்று நாள்களாக உணவு, தூக்கம் எதுவுமே இல்லாமல் பேசிக்கொண்டிருந்ததை நான் கவனித்தேன். அதனால் என் மனம் வேதனையில் துடிக்கிறது. பசியும் களைப்பும் உங்களுக்கும் இருக்கத்தானே செய்யும்! மூன்று நாள்களாக ஒரு டம்ளர் தண்ணீர்கூட நீங்கள் குடிக்கவில்லையே! என்று பரிவுடன் கூறினான். அவனது அன்பு என் மனத்தை நெகிழச் செய்தது. நான் அவனிடம், சாப்பிடுவதற்கு நீ எனக்கு ஏதாவது தருகிறாயா? என்று கேட்டேன்.

அதற்கு அவன், நீங்கள் சாப்பிடுவதற்கு ஏதாவது தர வேண்டும் என்றுதான் என் மனம் ஏங்குகிறது. ஆனால் என்ன செய்வேன்? நான் தாழ்ந்த சாதியைச் சேர்ந்தவன் சக்கிலியன். நான் சப்பாத்தி செய்து உங்களுக்குத் தர முடியாது. கோதுமை மாவும் மற்ற பொருள்களும் நான் உங்களுக்குக் கொண்டுவந்து தருகிறேன். நீங்களே சமைத்துச் சாப்பிடுங்கள் என்று கேட்டுக்கொண்டான். நான் அவனிடம், பரவாயில்லை. நீயே சமையல் செய்துகொண்டு வா. நான் சாப்பிடுகிறேன் என்றேன். இவ்விதம் நான் கூறியதைக் கேட்டு அவன் நடுங்கிவிட்டான்.

காரணம், சக்கிலியனான அவன் ஒரு துறவிக்கு உணவளித்தது மற்றவர்களுக்குத் தெரிந்தால் தண்டிக்கப்படுவான். ஏன், நாடு கடத்தவும் செய்வார்கள். ஆனால் நான் அவனைச் சமாதானப்படுத்தி, உனக்குத் தண்டனை கிடைக்காமல் நான் பார்த்துக்கொள்கிறேன் என்று உறுதியளித்தேன். அவன் எனது உறுதியை அவ்வளவாக நம்பவில்லை. இருந்தாலும் அவனுக்கு என்மீதிருந்த அன்பு காரணமாகச் சப்பாத்தி செய்து கொண்டு வந்தான். அதை நானும் சாப்பிட்டேன். தேவர்களுக்குத் தலைவனான தேவேந்திரன் ஒரு தங்கக்குவளையில் தேவாமிர்தத்தை எனக்குத் தந்திருந்தால் – அதுகூட அப்போது அவ்வளவு ருசியாக இருந்திருக்காது என்றே எனக்குத் தோன்றியது.

என் இதயம் அன்பாலும் நன்றியாலும் நிறைந்தது. என் கண்கள் கண்ணீரைப் பொழிந்தன. இதற்கிடையில், விவேகானந்தர் தாழ்ந்த சாதியைச் சேர்ந்த ஒருவன் கொடுத்த உணவைச் சாப்பிடுவதைப் பார்த்த உயர் சாதியினர் சிலர் கோபம் கொண்டார்கள். அதை அவர்கள் விவேகானந்தரிடமே தெரிவித்தார்கள். அவர்கள் கூறியதைப் பொறுமையாகக் கேட்டார் விவேகானந்தர். பிறகு அவர்களைப் பார்த்துக் கூறினார். நீங்கள் என்னை மூன்று நாள்கள் தொடர்ந்து பேச வைத்தீர்கள்!

இடையில் நான் ஏதாவது சாப்பிட்டேனா, ஓய்வெடுத்தேனா என்று ஒருமுறைகூட நீங்கள் யாரும் கவலைப்படவில்லை. நீங்கள் பெரிய மனிதர்கள், உயர்ந்த சாதியினர்! ஆனால் இங்கே பாருங்கள், தனக்குத் தண்டனை கிடைக்கும்! என்று தெரிந்திருந்தும், மனிதநேயம் என்ற ஒரே காரணத்தால் அவன் எனக்கு உணவு தந்தான். அவனைத் தாழ்ந்த சாதியைச் சேர்ந்தவன் என்று நீங்கள் ஒதுக்குகிறீர்களே! இது உங்களுக்கு வெட்கமாக இல்லையா? சில நாள்களில் விவேகானந்தருக்கு கேத்ரி மன்னருடன் நல்ல பழக்கம் ஏற்பட்டது.

அப்போது விவேகானந்தர், செருப்புத்தைக்கும் தொழிலாளி தனக்கு உதவியதைப் பற்றி மன்னரிடம் தெரிவித்தார். எனவே மன்னர், உடனடியாகச் செருப்புத் தைக்கும் தொழிலாளியைத் தன் அரண்மனைக்கு வரவழைத்தார். தொழிலாளி, என்னை மன்னர் அழைத்திருக்கிறாரே! என் தவறுக்கு என்ன தண்டனை கிடைக்கப் போகிறதோ! என்று பயந்துகொண்டே வந்தான். ஆனால் கேத்ரி மன்னர் அவனுடைய பயத்தைப் போக்கியதுடன், அவனுடைய செயலைப் புகழ்ந்து பாராட்டினார். மேலும் அரசர் அவனுக்குப் பொன்னும் பொருளும் தாராளமாகக் கொடுத்தனுப்பினார்.

# விடுகதைகளும் விடைகளும்

1. ஒரு தட்டில் 12 இட்லி 3 கரண்டி அது என்ன?

**கடிகாரம்**

2. பார்ப்பதற்கு ஐந்து கால் எண்ணுவதற்கு நான்கு கால் அது என்ன?

**யானை**

3. ஓய்வில்லாமல் சுற்றி வரும் அண்ணன் தம்பிகள் நின்று விட்டால் நமக்கு நேரம் சரியில்லை?

**கடிகாரம்**

4. எல்லோருக்கும் கால் தடம் உண்டு. இந்த குள்ளனுக்கு மட்டும் அது கிடையாது அந்த குள்ளன் யார்?

**எறும்பு**

5. வெண்மையாக இருப்பேன் பால் அல்ல. விசேட நாள்களில் வீடுகளை பளிச்சிட வைப்பேன் நான் யார்?

**சுண்ணாம்பு**

6. பாளை போல பூ பூக்கும் பார்ப்போருக்கு விருப்பூட்டும் தலையிலே சூடாத பூ அது என்ன பூ?

**வாழைப்பூ**

7. யானை படுக்க நிழல் உண்டு. கடுகு மடிப்பதற்கு கூட இலை இல்லை அது என்ன மரம்?

**சவுக்கு மரம்**

8. இரண்டு வீட்டுக்கும் ஒரே முற்றம் அது என்ன?

**மூக்கு**

9. வாய்க்க வெட்டி வரப்பு வெட்டி வைச்சது ஆயிரம் (1000) கப்பலேறி கணக்கு பகிர்ந்தால் முப்பதாயிரம் (30,000) அது என்ன?

**வெங்காயம்**

10. எலும்பு இல்லாத மனிதன் கிளை இல்லாத மனதில் ஏறுகிறான் அது என்ன?

**பேன்**

11. கூரைவீடுக்குள்ள செவ்வள பிள்ளை அது என்ன?

**நாக்கு**

12. கறுப்பு சட்டைக்காரன் காவலுக்கு கெட்டிக்காரன் அது என்ன?

**பூட்டு**

13. ஓடுறான், ஓடியாறான் ஒத்த காலில் நிக்கிறான் அவன் யார்?

**கதவு**

14. கல்லாலும்,மண்ணாலும் கட்டாத வீடு, காற்றிலே ஆடும் வீடு அது என்ன?

**தூக்கிணாங் குருவி கூடு**

15. பச்சைப் பெட்டிக்குள் வெள்ளை முத்துக்கள் அது என்ன?

**வெண்டைக்காய்**

# கொக்கு



கொக்கு வெள்ளை கொக்கு
குளத்தங்கரைக் கொக்கு
திக்கு எட்டும் சென்று
திரும்பி வரும் கொக்கு

வாடி நிற்கும் கொக்கு
வளைந்து நிற்கும் கொக்கு
நாடி நின்று மீனை
பிடிக்கும் கொக்கு

காலைத் தூக்கி நின்று
கடவுள் அருளைக் கண்டு
வேளை மூன்றும் உண்டு
வணங்கும் இந்தக் கொக்கு








# காடுகளை அழிப்பதால் ஏற்படும் விளைவுகள்

இயற்கை நமக்களித்த அற்புத இயற்கைப் படைப்புகளில் ஒன்றே காடுகளாகும். மனிதன் உள்பட பல கோடி உயிரினங்களின் அடிப்படை ஆதாரமாகக் காடுகள் விளங்குகின்றன. உலகில் 160 கோடி பேர் அன்றாட வாழ்க்கைக்கு காடுகளையே நம்பியுள்ளனர். அதுபோல் பல வகையான உயிரினங்கள் வாழ்வதற்கு ஏற்ற இடமாகவும் விளங்குகிறது. இத்தகைய காடுகளானவை மனிதனின் சுயநலத்திற்காகவும், இயற்கை அனர்த்தங்களினாலும் அழிவுகளுக்கு உட்படுகின்றன. காடுகள் செழிப்பாக இருந்தால் தான் ஒரு நாடு செழிப்பாக இருக்கும் என்பதனை மறந்து காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றன.

மரங்கள் இல்லையெனில் மனித இனம் இல்லை. மரங்கள் நம் வாழ்வோடும், கலாசாரத்தோடும் இணைந்துள்ளன. மரங்கள் மற்றும் தாவரங்களில் இலைகளிலிருந்து வெளியேறும் பிராணவாயு மனிதனின் சுய மூச்சுக்கு இன்றியமையாததாகும். மரங்களின் முக்கியத்துவம் பற்றி அறியாத மனிதன் தனது சுயநலத்திற்காகவும், தனது தேவைக்காகவும் மரங்களை வெட்டி வருகின்றான். இதனால் குறுகிய மற்றும் நீண்ட காலத்திற்கு நமக்கு தீங்கு விளைவிக்கப்படுகின்றது என்பதை யாரும் கவனத்தில் கொள்வதில்லை.

## காடுகளை அழிப்பதால் ஏற்படும் விளைவுகள்

### 1. புவியின் பருவநிலை மாற்றத்தை அதிகரிக்கும்

புவியின் தட்பவெப்ப நிலைகள் மாறுகின்றன. வளிமண்டலத்தில் பசுமையில்லா வாயுக்கள் அதிகரித்தல் போன்ற தீங்குகள் ஏற்படுகின்றன.

### 2. மனிதனின் வாழ்க்கைத் தரம் பாதிப்படைகின்றது



காடுகள் அழிப்பினால் காடுகளை நம்பிவாழும் மக்களின் வாழ்வாதாரம் அழிக்கப்படுகிறது. கிராம மக்கள், நகரம் நோக்கி வேலை தேடி வருகின்றனர். இதன் காரணமாக வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படுகின்றது. இது நாட்டின் பொருளாதாரம், எதிர்கால வளர்ச்சி ஆகியவற்றிற்கும் தவிர்க்க முடியாத அச்சுறுத்தலாக உள்ளது.

### 3. உயிர்க்கோளமான பூமிக்குத் தேவையான பிராண வாயுவை உற்பத்தி செய்வதில் சிக்கல் ஏற்படுகின்றது

மரங்கள் காற்றில் கலந்த காபனீரொட்சைட் வாயுவை கிரகித்துக்கொண்டு சுவாசிப்பதன் மூலமாக ஒட்சிசனை வெளியேற்றுகின்றன. நமது சுய தேவைகளுக்காக, இலாப நோக்கத்திற்காக, அறியாமையின் காரணமாக காடுகளை அழிப்பதால் தொழிற்சாலைகளும் மனிதனும் விலங்குகளும் வெளிவிடும் காபனீரொட்சைட் முழுவதையும் உறிஞ்சிக் கொள்ளும் அளவிற்கு உலகில் மரங்கள் இல்லாமல் போய் விடும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

### 4. அரிய வகை மூலிகைகளும் விலங்குகளும் அழிக்கப்படுகின்றன

காடுகள் தன்னகத்தே பல அரியவகை மூலிகைச் செடிகளைக் கொண்டு உள்ளன. காடழிப்பினால் தாவரங்கள், மூலிகைகள், பறவைகள், விலங்குகள், பூச்சிகள், புழுக்கள், எண்ணற்ற நுண்ணுயிர்கள் ஆகியவை எல்லாமே ஒட்டுமொத்தமாக அழிந்து விடுகின்றன.

காடுகளை வாழ்விடமாகக் கொண்டே அதிகளவிலான விலங்குகளும், பறவைகளும் வாழ்கின்றன. காடுகளை அழிப்பதன் மூலம் அவைகளின் இருப்பிடங்களும் அழிக்கப்படுகின்றன. காட்டு விலங்குகள் உணவின்றியும், உறைவிடமின்றியும் வேறு பிரதேசங்கள் நோக்கி இடம் பெயருகின்றன.

### 5. மண்ணரிப்பு ஏற்படுகின்றது

மரங்களின் வேர்கள் நிலத்தை பற்றிப்பிடிப்பதனால் மண் அடித்துச் செல்லாமல் பாதுகாக்கப்படுகின்றது. மரங்களை வெட்டும் போது சரிவுகள் அல்லது திறந்த பகுதிகள் போன்றவற்றில் காற்றைத் தடுக்க ஏதுவாக எதுவும் இருப்பதில்லை. இதனால் மண் அடித்துச் செல்லப்படுகிறது.காட்டு மரங்களின் வேர்கள் மண் பகுதியைப் பற்றிப் பிடிப்பதால் மண்ணரிப்பு ஏற்படுவது தடுக்கப்படுகின்றது. ஆனால் காடுகள் அழிக்கப்படுவதால் மண் அரிப்பு ஏற்படுவதோடு விவசாயமும் பெரிதும் பாதிப்பு அடையும்.

### 6. பாலைவனங்கள் உருவாதல்

மண்ணின் உயிரியல் வளம் அழிவதால் அந்த நிலம் எதற்கும் பயன்படாமலும், எதுவும் விளையாமலும் பாலைவனமாக மாறுகிறது.

### 7. மழைப்பொழிவு பாதிப்பு

உயர்ந்த காடுகள் காற்றுகளை தடுத்து மழை வீழ்ச்சியை கொடுக்கின்றன. உலகில் பெருமளவில் காடுகள் காணப்படும் பகுதிகளான கொங்கோ, அமேசன் போன்ற பகுதிகளில் 2,000 mm மேற்பட்ட மழைவீழ்ச்சி கிடைக்கின்றது. எனவே காடுகள் அழிக்கப்படுவதால் மழைப்பொழிவு பெரும் பாதிப்பு ஏற்படுகின்றது.

### 8. வறட்சி

பொதுவாக தாவரங்கள் குறித்த ஒரு பகுதியில் மழை வீழ்ச்சிக்கு வித்திடுவதுடன் ஈரப்பதனையும் பாதுகாக்கின்றது. ஆனால் காடுகள் அழிக்கப்படுவதால் நேரடியாக ஆவியாக்கம் இடம்பெறுவதுடன், குறிப்பிட்ட பிரதேசத்தில் வறட்சியையும் ஏற்படுத்துகின்றது.

### 10. புதிய வகை நோய் தொற்றுகள் ஏற்படுகின்றன

காடழிப்பால் வாழ்விடத்தை இழந்த விலங்குகள் உணவின்மையால் மனிதர்கள் வாழும் பகுதிக்கு படையெடுப்பதாலும், விலங்குகளுக்கு மட்டுமே பரவக் கூடிய நோய்க் கிருமிகள் விலங்குகளிடத்திலிருந்து மனிதருக்கும் பரவத் தொடங்குகிறது.

### 11. பிராண வாயுவின் அளவு குறையும்

மனிதன் சுவாசிக்க தேவையான பிராணவாயுவை மரங்களே உற்பத்தி செய்யும் மையங்களாக காணப்படுகின்றன. மரங்கள் வெட்டப்படுவதால் பிராண வாயு எதிர்காலத்தில் கிடைக்காமல் போய்விடும் அபாய நிலை தோன்றலாம்.

### 12. புவி வெப்பமடைகிறது

புவி வெப்பமடைவதற்கு காரணமான பசுமைக்குடில் வாயுக்களில் முதலிடத்தில் இருக்கும் கரியமில வாயுவை உள்ளீர்த்து பூமியை மிதமான வெப்பநிலையில் வைத்திருப்பதில் மரங்களே முக்கிய பங்களிப்புச் செய்கின்றன. எனவே மரங்களை வெட்டும் போது புவி வெப்பமடைகின்றது.

### 13. பறவைகளின் வாழ்விடங்கள் அழிக்கப்படுகின்றன

மரங்களில் பறவைகள் பொந்து அமைத்தும், கூடுகள் கட்டியும் வாழ்கின்றன. மரங்களை வெட்டும் போது அவற்றின் வாழ்விடங்கள் அழிக்கப்படுவதுடன் வேறு இடங்களுக்கு இடம்பெயர்கின்றன.

### 14. மண்வளம் பாதிக்கப்படுகின்றது

பூமியின் மீது நேரடியாக வேகமாக விழும் மழை மரங்கள் தங்கள் மீது தாங்கிக் கொள்கின்றன. மழை நேரடியாக பூமியில் விழுந்தால் நிலப்பரப்பின் மேல் மண் தண்ணீரோடு அடித்துச் செல்லப்பட்டு நிலம் பலவீனம் அடையும்.

### 15. பல்லுயிரின மாறுபாட்டின் இழப்பு

ஒரு தாவரம் அழிக்கப்பட்டால் அதை நம்பி வாழும், அண்டி வாழும் உயிரினங்களின் அழிவுக்கு காரணமாக அமைந்து விடும். மரங்கள் மனிதனின் உணவுத் தேவையை பூர்த்தி செய்கின்றது அதேபோல் விலங்குகளுக்கும், பறவைகளுக்கும் உணவு மற்றும் வாழ்விடங்களை அளிக்கின்றது. மரங்களை அழித்தால் அதை நம்பி வாழும் உயிரினங்களின் அழிவுக்கும் வழிவகுக்கும்.

### 16. மழைப்பொழிவு குறையும்

மழை அதிகமாகப் பெய்யக் காரணம் மரங்கள் நிறைந்திருப்பதுதான். ஆனால் மரங்கள் அழிக்கப்படும் போது பருவமழை காலங்களில் பெய்யும் மழை கிடைக்காமல் போய் விடுகின்றது. இதனால் எதிர்காலத்தில் நீர்ப்பற்றாக்குறை ஏற்படும் அபாயமும் உள்ளது.

### 17. அரிய வகை இனங்கள் அழிக்கப்படுகின்றன

மரங்களை வெட்டுவதும், மரங்களின் இனங்களை முன்கூட்டியே அழிப்பதற்கு சமன் ஆகிவிடுகின்றது. தொடர்ந்து அழிக்கப்படுவதால் அரிய வகை மரங்கள் முற்று முழுதாகவே அழிந்துவிடும்.

### 18. நாட்டின் பொருளாதாரம் பாதிப்படைகின்றது

பல்லுயிர் இழப்பு, மண் சரிவு மற்றும் இயற்கை வளங்களின் குறைப்பு, தட்பவெப்பநிலைகளை கடுமையாக பாதிக்கிறது, நகரங்களின் இயற்கை நிலைமைகளை மாற்றியமைத்தல், தொழில்துறைக்கு தேவையான உயிரினங்களின் இழப்பு போன்ற பல விளைவுகள் மரம் அழிப்பதனால் ஏற்படுகின்றது. இவ் விளைவுகள் நாடுகளின் பொருளாதாரத்தையும் பாதிக்கிறது.

### 19. மண்ணின் ஈரப்பதன் குறையும்

மரங்களால் மண்ணின் ஈரப்பதன் பாதுகாக்கப்படுகின்றது. மரங்கள் அழிக்கப்பட்டால் மண்ணின் ஈரப்பதன் குறைந்து அதன் வளம் குன்றும்.



# புதிய அலையில் நனைய இணைவோம்

ஊழற் புயலடித்த தேசத்தின்
கறைபடிந்த சாலைகளை
கண்ணீர் புகையாலும்
நீர்த்தாரைகளாலும்
கழற்றுதல் இயலுமோ?

ஒரே இரத்தம்,ஒரே வியர்வை
ஒரே இலக்கு, கறைகளைக் கழுவும்
மக்கள் எழுச்சியின்
அழியாத்தடங்களை
வரலாறு எழுதுகிறது
கடல்சூழ் தீவுக்குள் புதிய அலை.
சந்ததிகளின் எதிர்காலம் பற்றிய
அச்சம் கலைகிறது மெல்ல மெல்ல
ஒருநாளும் கிரகணங்கள் நீடிப்பதில்லை

அரியாசனங்கள் ஆடிப்போக அடித்த
மனித அலையில்
மன்னன் நாமம் மதிப்பிழந்தது
மக்கள் குரல் சூரியக்கதிராய்
சுட்டெரிக்க அதிர்கிறது தேசம் இன்று.
எந்த அநீதிக்கான எதிர்த்தலும்
அமைதியாய் உறங்குவதில்லை

இயல்பு நிலை அழித்து
வாழ்வின் சமநிலை கலைத்து
தனிமனித உரிமை பறித்தபின்னும்
சதி புரியும் தலைவர்களே!
எத்தனை முறை செத்துப்பிழைத்தோம்.
இன்னுமா சாக நினைப்போம்?

இனம்,மொழி,மதம் கடந்தார் இத்தேச
மக்கள் இனம்,மொழி,மதம் கடந்தார்
பொது எதிரி அரசியல் சாக்கடை அதன்
எல்லா முகங்களும்
ஒரே முகமே என எழுதுவோம்
எல்லா மக்களுக்குமான
புதுமுகம் தேடுவோம்

நாங்கள் இந்த நாட்டின்
வாக்களித்த அப்பாவிகள்
நம்பி மோசம்போன ஏமாளிகள்

மக்கள் துயருறும் நாட்டில்
தலைவனுக்கேன் சிம்மாசனம்?
அதற்கேன் ஒரு அரசாங்கம்?

பாலையூற்று அஷ்ரபா நூர்தீன்

## பாட்டன் தந்த ஒரு ரூபாய்

பாட்டன் தந்த ஒரு ரூபாய்
பாக்கு வாங்க வைச்சி இருப்பார்
பாய்ந்து குதித்து ஓடி வந்தால்
பாசம் பொங்க தந்து விடுவார்

பெரிய விரலால் சுண்டி விட்டால்
பூவும் தலையும் சுத்தி வருமே
பெட்டி நிறைய இனிப்பு உண்டு
பேரன் கேட்டால் எடுத்துத் தருவார்

மடியில் தூக்கி கொஞ்சி மகிழ்வார்
மணிக் கணக்காய் கதையும் சொல்வார்
மதிய வெயிலில் தோளில் சுமந்து
மன்னன் என்னை வீடு சேர்ப்பார்

பொல்லுத் தடியால் ஊன்றி நடப்பார்
பொய்யும் களவும் கூடாது என்பார்
வெள்ளை வேட்டி கட்டி நிற்பார்
வேளை தவறி எழும்ப மாட்டார்

போகும் வழியில் கடைகள் இருக்கும்
பொருட்கள் என்றும் கண்ணைக் கவரும்
பொறுமை இழந்து வாங்கக் கேட்டால்
பொக்கை வாயால் சிரித்தே கடப்பார்

சம்பூர் சமரன்



# கலைக் கதிர்

## படித்ததில் பிடித்தது

# வெற்றியின் இரகசியம்

சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவில் ஓர் ஊரில் தங்கியிருந்தார்.

அங்கு ஒரு நீரோடையும் பாலமும் இருந்தன.

ஒரு நாள் சுவாமி விவேகானந்தர் நீரோடைக் கரையில் நடந்து சென்றுகொண்டிருந்தார்.

அங்கு இளைஞர்கள் சிலர் முட்டையோடுகளைத் துப்பாக்கியால் குறிவைத்து சுடுவதற்குப் பயிற்சி செய்துகொண்டிருந்தார்கள். அவர்கள் முட்டை யோடுகளை ஒரு நூலில் கட்டி நீரோடையில் மிதக்க விட்டிருந்தார்கள். அந்த நூல் நீரோடைக் கரையி லிருந்த சிறிய ஒரு கல்லில் கட்டப்பட்டிருந்தது.

நீரோடை நீரின் அசைவுக்கு ஏற்ப நூலில் கட்டப் பட்டிருந்த முட்டையோடுகள் இலேசாக அசைந்து கொண்டிருந்தன.

இளைஞர்கள் பாலத்தில் நின்று ஓடை நீரில் அசைந்துகொண்டிருக்கும் முட்டையோடுகளைச் சுடுவதற்கு முயற்சி செய்துகொண்டிருந்தார்கள்.

அவர்கள் துப்பாக்கியால் முட்டையோடுகளைச் சுட்டார்கள். ஆனால் அவர்கள் வைத்த குறி தவறித் தவறிப் போயிற்று. ஒரு முட்டையோட்டைக்கூட அவர் களால் சுட முடியவில்லை. இளைஞர்களின் இந்தச் செயலை விவேகானந்தர் பார்த்தார். ‘இவர்களால் இந்த முட்டையோடுகளைச் சுடமுடியவில்லையே’ என்று நினைத்தார். அதனால் அவர் முகத்தில் புன் னகை தவழ்ந்தது.

இதை அங்கிருந்த இளைஞர்களுள் ஒருவன் கவனித்தான். அவன் விவேகானந்தரிடம் பார்ப் பதற்கு இந்த முட்டையோடுகளைச் சுடுவது அவ்வளவு சுலபமானது போலத் தெரியும். ஆனால் நீங்கள் நினைப்பதுபோல இந்த முட்டையோடுகளைச் சுடுவது அவ்வளவு சுலபமான செயல் அல்ல. நீங்களே முயற்சி செய்து பாருங்கள்! அப்போது உங்களுக்கே தெரியும் என்று கூறினான்.

சுவாமி விவேகானந்தர் துப்பாக்கியைக் கையில் எடுத்தார். அங்கிருந்த முட்டையோடுகளைக் குறி வைத்து சுட ஆரம்பித்தார்.

அப்போது அங்கு சுமார் பன்னிரண்டு முட்டை யோடுகள் நீரோடையில் மிதந்துகொண்டிருந்தன.

விவேகானந்தர் வைத்த குறி ஒன்றுகூட தவற வில்லை. வரிசையாக அவர் ஒவ்வொரு முட்டை யோடுகளாகச் சுட்டார்.



அங்கிருந்த அத்தனை முட்டையோடுகளும் வெடித்துச் சிதறின!

இதைப்பார்த்து அங்கிருந்த இளைஞர்கள் பெரிதும் வியப்படைந்தார்கள். அவர்கள் விவேகா னந்தரிடம் நீங்கள் துப்பாக்கி சுடுவதில் ஏற்கனவே நல்ல பயிற்சி பெற்றவராக இருக்க வேண்டும். அதனால்தான் நீங்கள் அத்தனை முட்டையோடு களையும் ஒரு குறிகூடத் தவறாமல் சுட்டீர்கள் இல்லையா? என வினவினார்கள்.

அதற்கு விவேகானந்தர் என் வாழ்நாளில் இன்றுதான் நான் முதன்முறையாகத் துப்பாக்கி யைத் தொடுகிறேன் என்றார்.

அவர் கூறியதை இளைஞர்களால் நம்பமுடிய வில்லை.

அவர்கள் அப்படியானால் ஒரு குறிகூடத் தவறாமல் உங்களால் எப்படி முட்டையோடுகளை சுட முடிந்தது? என்று கேட்டார்கள்.

அதற்கு விவேகானந்தர் எல்லாம் மனதை ஒருமுகப்படுத்துவதில்தான் இருக்கிறது. மனதை ஒருமுகப்படுத்திச் செய்யும் எந்தச் செயலும் வெற்றி யைத் தரும் என்று பதிலளித்தார்.

வெற்றியின் இரகசியம் மனத்தை ஒருமுகப் படுத்துவதில்தான் இருக்கிறது.

செல்வி.தீபகாந்தன் கேசவி
ஆண்டு 6.
ஸ்ரீசண்முகா இந்துமகளிர் கல்லூரி
திருகோணமலை.

# சமுதாய தொற்று

ஒன்றரை லீற்றர் போத்தலுடன்
நிற்கும் முதியவரை முறைக்கும்
இருபத்தைந்து லீற்றர்
கலனுடன் வந்த இளைஞர்

காவல் துறையின் கண்ணை கடந்து
அக்ஸிலேட்டர்களை அலறவிடும்
கொண்டை வளர்த்த தம்பிமார்கள்

அங்குலமிடம் கண்டவுடன்
அடுத்தவனை
நினையாது ஆர்முடுகும்
அக்காமார் அன்டிமார்

ஆப்பிஸ் ஆடையில்
எம்மூலை தென்படினும்
அது தம் - மூலை எனக்கொள்ளும்
அண்ணன்மார்

இவ்வாறான பல
‘அநாகரிக’ தர்மபாலாக்களால்
நிரம்பி வழிகிறது எரிபொருள்
நிரப்பு நிலையங்கள்

பழக்கவழக்கம் பெரும்பாலும்
பாதியில் வந்துவிடாது
‘அடி’ தவறி வந்து
அரிதாரம் பூசி உலாவும்

இவர்கள்

எம்முள் வாழும்
நவநாகரிக நல்லவர்கள்

வாழுவீர்கள் நீடூழி
நாடும் வீடும்
உங்களுக்கேயன்றி எங்களுக்கு
இனி இல்லை.

- விமலாந்தன் -

# கல்லாதவன் உழைப்பு களவாடப்படும்

சிறுகதை

அகலிகா பிரம்மி

கஞ்சி குடித்தால் போதும் உயிர்வாழ என்று கல்லு மேடு கடப்பது போல் வாழ்வை கண்ணீரோடு கழிக்கும் பலர் வாழும் உலகில் ராமசாமியும் ஓர் தந்தை.

ஒன்றா இரண்டா 6 பிள்ளைகள் வஞ்சகம் இன்றி பெண்கள் 3 ஆண்கள் 3 என் செல்வங்கள் என்று ஆசையாய் அழைத்தாலும் செல்வத்தின் வாசனை கூட அவன் வாசல்படி வருவதாய் இல்லை.

வறுமையின் வேலியைப் பிடித்துக்கொண்டு தாண்டி விடலாம் என்று ஏத்தி ஏத்தி கொண்டு நின்றான் ராமசாமி. வயதானாலும் சுறுசுறுப்பால் உறுதியானவன். கண்ணம்மா அவளின் முகமலர்ச்சி தான் என்னவோ ராமசாமிக்கு உயிர்வாழ ஊக்கம் தந்து கொண்டிருந்தது வீட்டில் கஞ்சிக்கு பஞ்சம் வந்தாலும் கண்ணம்மா முகத்து புன்னகைக்கு ஒன்றும் வந்துவிடாது பஞ்சம்.

ராமசாமி பிள்ளைகளுடன் அவனுக்கு இருந்த ஒரே வயல் காணியில் மூச்சு முட்ட முட்ட பாடுபட்டு பாதி ஆண்டில் பிள்ளைகளுக்குச் சோறும் மீதி ஆண்டில் கஞ்சியும் கொடுக்க பலன் தேடி விடுவான் இப்படியே கடந்த நாள்களில்... ஒரு நாள் ராமசாமி வயலில் வேலை செய்யும் போது கண்ணம்மாவை பார்த்து “என்னடி புள்ள எத்தனை காலம் கஞ்சிக்கும் சோத்துக்கும் காலம் கழியப்போகுது எண்டைக்கு வீடு வாசல்ல நாரிய சாச்சி எப்ப தூங்குறது” சலித்துக்கொண்டான்.

அந்த நேரம் பார்த்து சின்னஞ்சிறுசுகள் வெள்ளை ஆடையுடன் கொக்குக் கூட்டம் உலா வருவது போல் அவன் வயல் வரப்போரம் வீதியில் பாடசாலையை நோக்கி நடந்து கொண்டிருந்தனர் ராமசாமியின் சின்ன மகள் சேறு பூசிய கால்களுடன் நீர் வியர்வையை முத்தென தெறித்து அவன் முகம் நனைக்க ஓடிவந்து அப்பா அங்க பாருங்க? அவையள் பள்ளிக்கூடம் போயினம் நானும் போகட்டுமா? விரக்தி நரம்பு தெறிக்க அவன் கண்ணம்மாள்...... இந்த புள்ளைய என்ன வண்டு கேளடி ஊரு படுற பாட்டுக்கு ஊமையனுக்கு விசிலாம். ராமசாமியின் சலிப்பு கசிந்த வார்த்தைக்குள் ஊடுருவிய கண்ணம்மாள் என்ன புள்ள கஞ்சிக்கு வழியைக் காணோம் பள்ளிக்கூடமா? சும்மா போய் சோலிய பாரு ஒடுங்கி சுருங்கிய அந்த சின்னம் சிட்டின் முகம் அவள் கழுத்தில் மறைய எத்தணித்தது மறுநொடி ஏதோ ஓர் அழைப்பு என்ன ராமசாமி அண்ணே சின்ன மகள் முகம் இப்படி ஆச்சு? அயல் தோட்டக்காரன் முதல் ஏதோ செய்தி சொல்ல வந்தான் என்ன முத்தன் அவளுக்கு படிக்கணுமாம் இந்தத் துண்டு வயல் கஞ்சிக்கு மட்டும் கை கொடுக்குது இதுக்குள்ள எப்படி படிப்பு எங்களுக்கு. பள்ளிக்கு போகணுமாம் அடம் பிடிக்கிறாள்.முத்தன் என்ன சின்ன அன்னம் என கேட்டபடி ராமசாமி அண்ணே உங்களுக்கு கதை தெரியாதே நம்ம ஊர் செல்வந்தர் குத்தகைக்கு வயல் கொடுக்கிறாராம் சும்மா போய் விசாரி எங்கோ கடவுள் விட்ட வழி இருந்தால் கருணை செய்வார் சரி அண்ணே வாரேன் என்று முத்தன் ஏதோ தேன் துளியை சொட்டி விட்டு கடந்து போனான்.

கண்ணம்மாள் இங்க பாருங்கோ நானும் பிள்ளைகளும் இண்டையான் சோலி பார்க்கிறோம். நீங்க செல்வந்தரை காணப் போனால் என்ன? அவள் கேள்விக்கு முற்றுப் புள்ளியிட முதல் அவன் முகத்து வியர்வையை வழி தெரிந்து விட்டு விடை பெற்றான். செல்வந் தன் ஐயா...... ? செல்வந்தன் ஐயா......? என்ன?? ராமசாமி குரலாச்சே வா ராமசாமி உட்காரு என்ன சங்கதி.

ஐயா சாமி நீங்க வயல் குத்தகைக்கு கொடுக்கிறதா முத்து என்று சொன்னால் ஏதும் கருணை காட்டினார் நானும் என்ற பிள்ளைகளும் கஞ்சிக்கு பதில் சோறு சாப்பிடுவோம் ஐயா.

என்ன ராமசாமி கெஞ்சிக்கொண்டு நீ நம்ம ஊர்க்காரன் உனக்குத் தராமலா எல்லாம் தரலாம் முதல் போய் விட்ட பொண்டாட்டி புள்ளைகளை அனுமதி எடுத்துட்டு வா படு காட்டுல வயல் இருக்கு பத்திரம் எழுதி தாரேன் நன்றி ஐயா கும்பிட்ட கை கீழே வரமுன் குதிக்கால் பிடரியில் அடிபட வீடு வந்தான் ராமசாமி கண்ணம்மா கண்ணு பிள்ளைகள் எல்லாரும் வாங்க செல்வந்தர் புண்ணியவான் உதவுவாராம் நமக்கு, கடவுள் கை விடல வாய்விட்டு புலம்பினாள் கண்ணம்மா குடும்பமாக செல்வந்தர் வீட்டு முற்றத்தில் கூடி நின்ற ராமசாமியைப் பார்த்து ராமசாமி உண்ட பிள்ளைகளுக்கு எழுத வாசிக்கத் தெரியுமே ராமசாமி? என்னய்யா கேள்வி எனக்கு எது சாமி பணம் படிக்க வைக்க ராமசாமியின் வேதனைகள் அந்த வார்த்தை செல்வந்தருக்கு கறி பூட்டியது குள்ளமாக உள்ளத்தில் சிரித்துக் கொள்கிறான் சரி இராமசாமி நான் எழுதி தாறேன் எல்லாரும் கேளுங்கோ பட்டவயல் தங்கம் விளையும் பூமி விளைச்சலில் நாலில் ஒன்று எனக்குத் தரவேண்டும் மூன்று பங்கு உங்களுக்கு புரியுது தானே சந்தோசம் அல்லவா? ஆனா வே தெரியாது அடுத்த எழுத்து எப்படி தெரியும் எழுதப்படுகின்றது ஒப்பந்தம் வயல் கிடைத்த மகிழ்ச்சியில் உள்ளம் பொங்க ஒரு வினாவும் இன்றி ஒவ்வொருவராய் மை தோய்த்து கைவிரல் அடையாளம் பதித்தனர். காகிதம் செல்வந்தரின் புத்தகத்தில் பத்திரம் செய்யப்பட்டது ராமசாமியின் பிஞ்சுகள் ஆறும் நெஞ்சு நோக பெற்றோருடன் ஒன்றாக பாடுபட்டனர் வயல் சிரிக்க ஆரம்பித்தது. அன்று ராமசாமி சின்ன மகள் அன்னத்துடன் வயல் காற்றைக் கிழித்துக் கொண்டு மெல்ல நடந்தான் தென்றலின் வருடல் அவன் மீது இதமானது அவனது கைகளை பிடித்த வண்ணம் அப்பா அப்பா அப்பா எதுவுமே பேசாமல் சிரித்துக் கொண்டே வாறீங்கள் என்று கேட்டாள். அப்போது தான் நினைவுக்கு வந்தான் ராமசாமி இல்லமா அப்பாக்கு வயல் நெல் கதிரை பார்த்த உடனே சந்தோசம் தாங்கல மா அப்படியா அப்போ இந்த வயல் வெட்டினால் நானும் பள்ளிக்கூடம் போகலாமா அப்பா? பிள்ளையை சினக்க அவனால் முடியவில்லை ஆமாடா கண்ணு அவள் கைகளைத் தன் இரு கைகளும் அனைத்து கொள்கின்றான். இதே களிப்புடன் கண்ணம்மாளின் முகம் பார்த்தாள் அவள் ராமசாமியிடம் அப்படி ஒரு கலையைக் கண்டு பல வருடம் ஆகிவிட்டது என்னப்பா எனக்கும் சொன்னா நானும் சேர்ந்து சிரிக்க போறேன் என்று குழைந்தாள் கண்ணம்மா இந்த முறை படுகாட்டுவயல் நம்ம பஞ்சம் எல்லாம் தீர்க்க போது பாறேன் நெல்லு கதிர் நிறைந்து வழிவதை பார்த்தா என் நெஞ்சம் எல்லாம் சொல்ல வார்த்தை இல்லம்மா போய் தண்ணீர் கொண்டா. சின்னவள் அண்ணா அக்கா அண்ணா அப்பா என்ன பள்ளிக்கு விட போறாரு அழைப்பு விடுத்தாள் அறுவடை நாள் வந்தது கும்பிட்ட சாமி கைவிடல எல்லாம் எண்ணிக்கை 100 மூட்டை 25 செல்வந்தருக்கு 75 நமக்கு ராமசாமி சொல்லி முடிக்க முதல் கண்ணம்மாள் விரல் எண்ணி ஏதோ கணக்கு செய்கின்றாள். மூட்டை கட்டி களத்துமேட்டில் நிறைந்தன செல்வந்தர் ஐயாவிற்கு செய்தி அனுப்பப்பட்டது ஐயா வீட்டு வண்டி வருது நெல்லு கொண்டு போக மூத்த மகன் அப்பா செல்வந்தர் ஐயாவும் கூடவாரார் அப்பா செல்வந்தர் ஆமா அப்பா கண்ணம்மா புண்ணியவான் நல்லா இருக்கணும் ஒரு குறையும் இல்லாமல் நூறு வருஷம் வாழணும் என வாழ்த்தினாள் கண்ணம்மா. செல்வந்தரை கண்டதும் இரு கையையும் நெஞ்சோடு குவித்தனர். குடும்பமாய் கொடுத்த வரவேற்பினாலும் பணக்கார மனசு மாறவில்லை. இராமசாமி ஐயா எல்லாம் 100 மூடை உங்க பங்கு 25 மூடை இங்கே இருக்குது வார்த்தை சிதறி வாய் மூடவில்லை என்ன ராமசாமி ஒப்பந்தம் நினைவில்லையா? மூன்று பங்கு எனக்கு ஒரு பங்கு உனக்கு என்ன சொல்றீங்க பதறித் துடித்தான் விவசாயி. சிலை ஆனால் கண்ணம்மா. எழுதின காகிதம் கையோடு கொண்டு வந்தேன் இதுதான் கேட்டன் உன்ர புள்ளயள் படித்தவையா எண்டு? எல்லாத்துக்கும் அப்போ மண்டைய ஆட்டிட்டு இப்போ என்ன ராமசாமி.... என்னை நம்புங்க இல்லாடால் படித்தவங்க கிட்ட குடுத்து வாசித்துப்பாருங்கள் மூத்த மகன் கைக்கு காகிதம் கைமாறியது அப்பாவை விரல் பிடித்து அழைத்தபடி அயல் வீட்டு வாத்தியிடம் விரைந்தான். வாத்தி ஐயா வாசியுங்கோ செல்வந்தரின் வறிய மனம் வஞ்சகம் செய்தது உண்மைதான். விலைமதிப்பில்லா மனித உழைப்பை களவாடியது உண்மை என்று காகிதம் சொன்னது. மூன்று பங்கு செல்வந்தருக்கு ஒரு பங்கு ராமசாமிக்கு இனி என்ன செய்ய இடியேறு மரமாய் சாய்ந்த சந்தையை தோளோடு தாங்கியபடி மீண்டும் களத்துமேடு வந்தான் மூத்தமகன் 75 மூடைகளும் செல்வந்தன் வண்டியில் ஏற்றப்பட்டன சற்றும் கருணை அற்ற செல்வந்தர் விடைபெற்றார். அடுத்த போகமும் உனக்கே வயல்தாரன் ஒப்பந்தம் இதுதான். வாழ்த்திய வாய் அடைத்தபடி படுகாட்டு வயலில் பட்டுப்போன மரமான கண்ணம்மாளின் காதுகளிடையே அம்மா! அம்மா! அப்போ இந்த முறையும் நான் பள்ளிக்கூடம் போக முடியாதா ? ராமசாமி கண்ணீர் கண்ணம்மாளின் கைகளை நனைத்து களத்து மேட்டை ஈரமாக்கியது.




- ந.லோகதயாளன் -

# நிவாரண உதவியிலும் அரசியலா?

இந்தியாவின் நிவாரணத்தில் இலங்கையில் அரசியல் மேற்கொள்வது தொடர்பில் இந்திய அதிகாரிகளும் கவலைகொள்கின்றனர்.

இலங்கையில் தற்போது நிலவும் கடும் பொருளாதார நெருக்கடி காரணமாக இந்தியா பல உதவிகளை இலங்கை அரசிற்கு வழங்கி வரும் நிலைமையில் – சில தனித்துவமான உதவிகளையும் மேற்கொண்டு வரும் சூழலில் – நிவாரண விநியோகப் படத்துடன் தமது முயற்சி அல்லது கோரிக்கையின் பெயரில் அவை வழங்கப்படுகின்றன எனத் தெரிவிப்பது தொடர்பிலேயே இந்திய அதிகாரிகள் விசனம் அடைந்துள்ளனர்.

தீவக மீனவர்களிற்கு எரிபொருள வழங்குமாறு தீவக மீனவர் சங்கத்தினரே எழுத்திலே கோரிக்கை வைத்தனரே அன்றி எந்தவொரு அரசியல்வாதியும் வாய் திறக்கவில்லை என இந்தியத் தூதரக அதிகாரி தெரிவித்தார்.

இந்திய அரசின் அந்த உதவியில் ஓர் அமைச்சர் ஆதாயம் தேடுவது தொடர்பில் பலர் எம்மை தொடர்புகொள்கின்றனர். அது தொடர்பில் வாய் விட்டுச் சிரிப்பதனை தவிர, வேறெதுவும் கூற முடியவில்லை.

தீவக மீனவர்களை சங்கத் தலைவர் அ.அன்னராசா அழைத்து வந்து தீவக மீனவர்களின் தனித்துவமான பிரச்சினைகளைப் பட்டியலிட்டமையோடு ஏற்கனவே தயாரித்து வந்த கோரிக்கை கடிதத்தையும் சமர்ப்பித்திருந்தனர்.

இவ்வாறு சமர்ப்பித்த கோரிக்கை கடிதத்திலே 15 ஆயிரம் லீற்றர் மண்ணெண்னை மட்டுமே கோரப்பட்டு இருந்தமையினால் அதன் செலவு குறைவாக காணப்பட்டது. இதனால் உடனடியாகவே எம்மால் அதனை சிபார்சு செய்து கொழும்பு ஊடாக டெல்லிக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இதன் அடிப்படையிலேயே இந்த 15 ஆயிரம் லீற்றர் மண்ணெண்னை யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டு 4 சங்கங்கள் ஊடாக வழங்கப்பட்டது. இதில் எந்தவொரு அரசியல் கட்சியும் தனித்து உரிமை கோர முடியாது.

இதேநிலைமையே மருத்துவப் பொருள்களிற்கும் ஏற்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை எம்மிடம் நேரடியாக விடுத்த கோரிக்கையின் பெயரிலேயே மருந்துப் பொருள்களை எடுத்து வந்துள்ளோம். அவர்கள் வழங்கிய பட்டியலின் பிரதியும் கை வசம் உண்டு. இதனால் உள்ளூர் அரசியலில் தலையீடு செய்ய நாம் விரும்பவில்லை. யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்ட மருந்துப் பொருள்கள் திங்கட்கிழமை எம்மால் கையளிக்கப்படும்.



எரிபொருள் விநியோகம் தொடர்பாக சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் கலந்துரையாடல் இடம்பெற்றபோது அமைச்சரும் வருகை தருவதனால் அது தனித்து அரசியல் மயப்படும் என்பதனாலேயே நாம் அவசர அவசரமாக மாவட்டச் செயலாளரையும் கண்டிப்பாக அந்த கலந்துரையாடலில் பங்குகொள்ளுமாறு அழைத்தோம்.

இந்தியாவினால் வட மாகாண மீனவர்களிற்கு வழங்கிய நிவாரண உதவி அந்த துறை சார்ந்தவர்களின் பட்டியலிற்கு வழங்கியபோதும் ஓர் கட்சியின் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் சிபார்சு செய்தவர்களிற்கே வழங்கப்பட்டதான தகவல் வீடியோ சகிதம் வெளிவந்ததோடு, மீனவர் சங்க பிரதிநிதிகளும் ஊடகவியலாளர் சந்திப்பில் அதைப் பகிரங்கமாகவே குறிப்பிட்டுச் சுட்டிக்காட்டிக் கூறியிருந்தமையும் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

இதன் காரணமாக இவ்வாறான பழிச் சொல்லிற்கு மீண்டும் ஆளாகக் கூடாது என்பதிலும் கவனம் கொண்டுள்ளோம் எனத் தெரிவித்தார்.

இதேநேரம் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்காக இந்திய கடற்படையினர் கப்பலில் கொழும்புத் துறைமுகத்திற்கு எண்ணையை எடுத்து வந்த இந்தியா, அதனை காங்கேசன்துறையில் இறக்கி தனது ‘கெத்’தைக் காண்பித்திருக்கலாம் என்ற பலமான கருத்தும் உள்ளது. ஏனெனில் கொழும்பில் இறக்கிய எண்ணை யாழ்ப்பாணம் எடுத்து வருவதற்கே 4 லட்சம் ரூபா போக்குவரத்துச் செலவு ஏற்படும் எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இந்தப் படிப்பினைகளின் அடிப்படையில் இனிவரும் உதவிகளேனும் காங்கேசன்துறை ஊடாக எடுத்து வரப்படவேண்டும். பூட்டியிருக்கும் யாழ்ப்பாணம் விமான நிலையத்தை மீண்டும் இயக்க இந்த நல்ல சந்தர்ப்பத்தை இந்தியா பயன்படுத்துமா என்பதே வடக்கு மக்களின் பெரும் கேள்வியாகவுள்ளது.

# ஒட்டகப்புலம் அமல உற்பவ மாதா ஆலயம் போரின் பின்னர் புனரமைக்கப்பட்டு யாழ் ஆயரினால் திறந்து வைக்கப்பட்டது

- கலாநிதி ஜூபன் மரியாம்பிள்ளை அடிகள் -
(ஊடக வருகை விரிவுரையாளர் - இலங்கை திறந்த பல்கலைக்கழகம்; ஓய்வு நிலை ஊடக வருகை விரிவுரையாளர் - யாழ் பல்கலைக்கழகம்; இயக்குநர் - பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்)



**அமல உற்பவ மாதா ஆலய அர்ச்சிப்பு, திருவிழா பற்றி பங்குத்தந்தை அலோய் அருணேஸ்குமார் அடிகளார்**

ஒட்டகப்புலம் அமல உற்பவ மாதா ஆலயத்தில் நேற்று 28 மே 2022 நடைபெற்ற அர்ச்சிப்பு மற்றும் நாளை மறுதினம் 31 மே 2022 நடைபெறும் திருவிழா பற்றிப் பங்குத்தந்தை அலோய் அருணேஸ்குமார் அடிகளார் காலைக்கதிர் தினசரிப் பத்திரிகை மற்றும் காலை, மாலை இணையத்தளப் பத்திரிகையின் ஞாயிறு கிறிஸ்தவ செய்தி இதழுக்குக் கருத்து தெரிவிக்கும் போது கூறியவை வருமாறு:-

யாழ்ப்பாணம் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை புனரமைக்கப்பட்ட ஒட்டகப்புலம் அமல உற்பவ மாதா ஆலயத்தை நேற்று - 28 மே 2022 அன்று - அர்ச்சித்துத் திறந்து வைத்தார்.

ஆயர் எமது பங்கிற்கு வருகை தருவது இது முதற் தடவையல்ல. 1990ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்த ஒட்டகப்புலம் அமலோற்ப மாதா ஆலயப் பங்கு மக்கள் போரின் பின்னர் வேகமாகச்



து.அலோய் அருணேஸ்குமார் அடிகளார்

செயற்பட்டு தமது ஆலயத்தைப் புனரமைத்தனர். ஆலயத் திருத்த வேலைகள் செய்யப்பட்டன. முகப்பு வேலை செய்யப்பட்டு புதிய கதவு, புதிய போட்டிக்கோ என்பன அமைக்கப்பட்டு 31 மே 2017 அன்று யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை ஆயரான பின்னர் முதல் தடவையாக வருகை தந்து சி.ஜீ.ஜெயக்குமார் அடிகளார் பங்குத் தந்தையாகப் பணியாற்றிய போது ஒட்டகப்புலம் அமலோற்ப மாதா ஆலயத்தைத் திறந்து வைத்துள்ளார்.

2022ஆம் ஆண்டுத் திருவிழாவை 31 மே 2022 அன்று யாழ்ப்பாணம் மறைமாவட்டக் குரு முதல்வர் கலாநிதி பி.ஜே.ஜெபரட்னம் அடிகளார் நிகழ்த்துவார்.

**80 ஆண்டுகளின் 2017இல் இரண்டாவது குருவாக மண்ணின் மைந்தர் அ.அன்ரோ டெனிசியஸ் அடிகளார்**

ஒட்டகப்புலம் அமலோற்ப மாதா ஆலயமைந்தரும் யாழ் புனித திருமுழுக்கு யோவான் ஆலயப் பங்கைத் வசிப்பிடமாகவும் கொண்டவருமான அ.அன்ரோ டெனிசியஸ் பேராலயத்தில் 15 யூன் 2017 அன்று குருவாக திருநிலைப்படுத்தப்பட்டு 17 யூன் 2017 அன்று ஒட்டகப்புலம் அமலோற்ப மாதா ஆலயத்தில் தமது முதற் திருப்பலியை ஒப்புக்கொடுத்தார். இவர் காலஞ்சென்ற யோண் பிலிப் அலோசியஸ் மற்றும் திருமதி மேரி றோஸ் லங்காவதி தம்பதியினரின் புதல்வர் ஆவார். ஒட்டகப்புலம் அமலோற்ப மாதா ஆலய பங்கின் முதற் குரவர் 80 ஆண்டுகளுக்கு முன்னர் பணியாற்றிய ஆசீர்வாதம் அடிகள் என்று அறிய வருகிறது.

**ஒட்டகப்புலத்திற்கு வளம் சேர்க்கும் செம்மண்ணும் அழகிணறும்**

வலிகாமம் வடக்கில் வசாவிளானுக்கு கிழக்குப் பகுதியில் ஒட்டகப்புலம் என்னும் சிற்றூர் அடைந்துள்ளது.

பலாலி விமான நிலையத்தில் இருந்து கிட்டத்தட்ட 03 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள ஒட்டகப்புல கிராமத்தை சங்கானை வீதி ஊடறுத்துச் செல்கின்றது. இவ் வீதி மேற்கே வசாவிளானையும் கிழக்கே அச்சுவேலியையும் இணைத்துச் செல்கிறது.

தற்போதும் அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள் இருக்கின்ற ஒட்டகப்புல கிராமம் மக்கள் யாருமற்ற இராணுவப் பிரசன்னம் உள்ள கிராமமாகவே ஓரளவு காட்சியளிக்கின்றது.

வளமான செம்மண்ணும் அழகிணற்று நீரும் ஒருங்கே அமைந்து பச்சைப்பசேல் என்று காட்சி தரும் எழில் கொஞ்சும் கிராமமே ஒட்டகப்புலம் கிராமம் ஆகும்.

தேவாலயம் - பாடசாலை - வாசிகசாலை - பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் - சேமக்காலை - முறிவு நோவு வைத்தியசாலை என்பவற்றின் மத்தியில் குடியிருப்புக்கள், விவசாய நிலங்கள் என அழகுற அமைந்திருந்த ஒட்டகப்புல கிராமம் இன்று அனைத்தையும் பறிகொடுத்து பொலிவிழந்த ஒரு சோகமான கிராமமாகவே காட்சி தருகிறது.

இராணுவம் சிறிது சிறிதாக விலகிய பகுதிகளை திரும்பக் கட்டி எழுப்பவும் வாழ்வாதாரங்களைத் தேடவும் மீள வாழ தொடங்கவும் முயன்று கொண்டிருக்கிறது.

**ஒட்டகப்புலம் என்ற பெயரின் வாய்வழிப் பாரம்பரியம்**

ஒட்டகப்புலம் என்ற பெயர் எவ்வாறு அமைந்தது என்பதற்கான காரணத்தை வரையறுத்து உறுதியாக கூற முடியாது போனாலும் ஊர் மக்களால் வாய்மொழியாக வழங்கி வரும் காரணங்களைக் கூறலாம். வாய்மொழியாக வழங்கி வருவதால் அவற்றை வெறும் கதைகள் என்று ஒதுக்கி விடவும் முடியாது. ஏனெனில் அவை ஏற்றுக்கொள்ளக் கூடியனவாகவும் உள்ளன.

ஆமல உற்ப மாதா ஆலயம் அமைந்துள்ள காணியின் பெயரான ஒட்டகப்புல வளவு என்பதில் இருந்தே மூதாதையர் கிராமத்தின் பெயராகவே ஒட்டகப்புலம் என சூட்டினார்கள் என கூறப்படுகின்றது.

ஒட்டகப்புலம் முறிவு நோவு வைத்தியத்திற்கு பெயர் போனது. எனவே ஒட்டு 10 அகம் 10 புலம் என ஒட்டகப்புலம் என்ற பெயர் உருவானது எனவும் கூறப்பட்டு வருகின்றது.

புலமாகக் காணப்பட்ட இடத்தில் வியாபாரிகள் கொட்டகைகள் அமைத்து பொருள்களை சேமித்து வைத்த பின்னர் காங்கேசன்துறை மயிலிட்டி ஊடாக பல்வேறு பகுதிகளுக்கும் எடுத்துச் சென்றார்கள் என கூறப்படுகிறது.

இவ்வாறு கொட்டகைகள் அமைக்கப்பட்டபடியால் கொட்டகைப்பலம் என பெயர் பெற்றதாகவும் பின் அது மருவி ஒட்டகப்புலம் எனப் பெயர் பெற்றதாகவும் குறிப்பிடுகிறது.

**ஒட்டகப்புலம் அமல உற்பவ மாதா சொரூபக்கதை**

ஒட்டகப்புலம் அமல உற்பவ மாதா ஆலய தேவதாயின் திருச்சொரூபம் 16ஆம் நூற்றாண்டிற்குரியது என அறிய வருகிறது. ஒட்டகப்புலம் அமல உற்பவ மாதா ஆலய தேவதாயின் திருச்சொரூபம் பற்றிய உறுதிப்படுத்தப்படாத ஒரு கதை உண்டு.

சில்லாலையில் உள்ள தொம்பயப்புலம் என்னும் ஒரு வயலை உழவன் ஒருவன் உழுது கொண்டு இருக்கும் போது ஒரு குரல் கேட்டதாகவும் உழவன் அந்த சத்தத்தை பொருட்படுத்தாமல் மீண்டும் உழத் தொடங்கியபோது கலப்பையின் கொழு மரப் பெட்டியில் மாட்டிக் கொண்டது. உழவன் ஒரு புதையல் கிடைத்து விட்டதாக எண்ணி பெட்டியை கவனமாகப் பிரித்துப் பார்த்தார்.

பெட்டியினுள் இரண்டு தேவதாயின் சொரூபங்களை கண்டு பயந்து போய் ஓடிச் சென்று இந்தச் செய்தியை சில்லாலை பங்குக் குருவிடம் கூறினார். அச்சொரூபங்களில் ஒன்று கரங்களைக் கூப்பிய படியும் மற்றது கதிரையில் அமர்ந்து இயேசுவைக் கரங்களில் வைத்திருந்த வாறும் அமைந்திருந்தது. குருவானவரும் சில்லாலை பங்கு மக்களும் வயலுக்குச் சென்று பெட்டியில் இருந்த இரண்டு தேவதாயின் சொரூபங்களையும் மீட்டு சில்லாலை ஆலயத்தில் வைத்தனர்.

வடமூலை உத்தரிய மாதா ஆலயப் பங்குடன் இணைந்திருந்த ஒட்டகப்புல மக்கள் அங்கிருந்து பிரிந்து வந்து ஒட்டகப்புல வளவில் ஒரு சிறு கொட்டகை அமைந்து செபம் செய்து வந்தனர்.

அந்த காலப்பகுதியில் ஒன்பது ஆலயங்களுக்கு ஒரு குருவானவரே நியமிக்கப்பட்டிருந்தார். ஆலயத்தில் ஒரு வருடத்துக்கு ஒரு முறை தான் திருப்பலி நடக்கும். மற்றைய ஆலயங்களுக்கு மக்கள் மாட்டு வண்டிகளிலும் நடைப்பயணம் ஆகவும் செல்வார்கள்.

மாதாவின் சொரூபம் கண்டெடுக்கப்பட்டது கேள்வியுற்று குடாநாட்டின் பல பகுதிகளிலிருந்தும் மக்கள் சென்று வழிபட்டு வந்தனர். அத்துடன் தங்கள் ஆலயத்துக்கு மாதா வைத் தரும்படி பல ஆலய பங்கு மக்களும் கேட்டனர்.

ஒட்டகப்புல ஊர்ப் பெரியவர்களும் கால்நடையாக சில்லாலை சென்று தேவதாயின் சொரூபம் தம்மிடம் இல்லை என்றும் தமக்கு ஒரு சொரூபத்தைத் தரும்படியும் கேட்டு வந்தனர்.

அப்போதைய சில்லாலை பங்குத் தந்தை தேவதாயின் சொரூபத்துக்கு விண்ணப்பித்த ஊர்கள் அனைத்தையும் எழுதி சீட்டிழுப்பின் மூலம் சொரூபம் வழங்கப்படும் என



அறிவித்தார்.

குருவானவர் அறிவித்த அன்றிரவு ஒட்டகப்புல மரியன்னை கனவில் குருவானவருக்குத் தோன்றி தன்னை ஒட்டகப்புல மக்களுக்கு கொடுக்கும்படியும் மற்றைய சொரூபத்தையும் சில்லாலையில் வைக்கும்படியும் கூறியுள்ளார்.

**மாட்டுவண்டிகளில் சில்லாலை பயணம்**

மாதா கிடைத்த செய்தியறிந்து ஒட்டகப்புலத்தில் வாழ்ந்த 17 குடும்பங்களும் மாட்டுவண்டிகளில் சில்லாலை சென்று சில்லாலையிலிருந்து மாட்டுவண்டியில் ஊர்வலமாக அன்னையை ஒட்டகப்புலம் கொண்டு வந்து தாம் ஏற்கனவே அமைத்த கொட்டகையில் மரியன்னையை வைத்து வழிபட்டு வந்தனர். அன்று முதல் வாய்பறைந்த மாதா என்று அவ்வன்னை அழைக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

**1990ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கையால் இடம் பெயர்வு**

1990ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையால் ஊர்மக்கள் அனைவரும் இடம் பெயர்ந்தனர்.

உள்நாட்டு யுத்தம் உச்சம் அடைந்த போது இலங்கை விமானப்படை குண்டு வீசி ஆலயத்தை அழிக்க முற்பட்ட போது மாதா ஆலய முகப்பில் தோன்றி குண்டுவீசச்சென்ற விமானிக்கு காட்சியளித்தார்.

ஒரு வயோதிபப் பெண் மட்டுமே நடமாடுவதால் என்னால் அங்கு குண்டு வீச முடியாது என விமானி மீண்டும் பலாலிக்கு திரும்பி விட்டார் என்று கூறப்படுகிறது.

**இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.**

# புலம்பெயர் மக்களின் எதிரொலியும் தாக்கமும்



- செல்லத்துரை ரவீந்திரன் -

## அங்கம் -23

1956 தேர்தலில் சிங்களம் மாத்திரமே அரசகரும மொழி ஆகும் என அறிவிக்கப்பட்டு, இனத் துவேத்தின் விதைகள் தூவப்பட்டன. எனினும் அப்போதும் தமிழர் சார்பில் செல்வநாயகம் ஓர் இணக்க அரசியல் பாதையில் பண்டா - செல்வா ஒப்பந்தத்தை ஏற்படுத்தினார். இது ஜே. ஆர். தலைமை தாங்கிய எதிர்க்கட்சிகளின் அழுத்தத்தால் கிழித்தெறியப்பட்டது.

அதைத் தொடர்ந்து எத்தனையோ இணக்க ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. எல்லாமே நடைமுறைப் படுத்தப்படாமல் ஒவ்வொரு வழியில் முடங்கின.

19 நவம்பர் 1976 இல் நாடாளுமன்றத்தில் தந்தை செல்வா பின்வருமாறு கூறினார்:-

"நாங்கள் ஒரு காலத்தில் கூட்டாட்சி முறையை முன்னெடுத்து, அதன் மூலம் தமிழ் மக்கள் இழந்து விட்ட தமது உரி



பிரபா

மைகளை மீளப் பெற்றுக் கொள்ளலாம் என நம்பினோம். தற்பொழுது கூட்டாட்சி முறையிலும் எமது எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றிக்கொள்ள முடியாது என்ற தீர்மானத்திற்கு வந்துள்ளோம். அதனால் நாம் பிரிந்து விட வேண்டும் என்ற நிலைப்பாட்டுக்கு வந்து இருக்கிறோம். நாம் அப்படி செய்யாவிட்டால் தமிழ் மக்கள் தமது இழந்த உரிமைகளை மீளப் பெற மாட்டார்கள்.

எமது முன்னோர்கள் மிகவும் புத்திசாலிகள். அவர்கள் இலங்கையின் சரித்திரத்திலேயே தங்களுடைய சொந்த அரசை வைத்திருந்தார்கள். அதனால் நமக்கும் ஓர் இடம் இருந்தது. நாங்கள் இப்போது பிரிவினை கேட்கவில்லை. நாம் இழந்தவற்றையே மீளக் கோருகிறோம். எங்களுடைய கட்சி தனிநாடு அமைத்துக் கொள்வது என்ற எண்ணத்துடன் முன்னேறுகிறது. தனி நாடு பெற்றுக் கொள்வது என்பது சுலபமான காரியமல்ல. இது மிகவும் கஷ்டமான காரியம். அதனை நாங்கள் அறிவோம். நாங்கள் சிங்கள மக்கள் கொண்டுள்ள அமோக அதிகாரங்களில் இருந்து வெளியேற வேண்டும். அன்றில் அழிந்து விடுவோம். அது நிச்சயம். ஆகவே நாங்கள் எப்பாடு பட்டாலும்பிரிவினைஅடையவேண்டும். நாங்கள் கூட்டுறவு ஆட்சி என்பதைக் கைவிட்டு விட்டோம். எங்களது பிரயாசைகள், முயற்சிகள் வன்முறையற்ற வழியாகவே இருக்கும்" - என்றார்.

1977ஆம் ஆண்டு தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ் மக்களின் ஏகோபித்த பிரதிநிதிகளாக வெற்றி பெற்றது. அந்தக் கட்சியின் தலைவர் சிவசிதம்பரமும், செயலாளர் அமிர்தலிங்கமும் நாட்டில் மிகப் பெரும்பான்மையான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றனர். இந்த வெற்றிகள் பெரும்பான்மைவாதிகளின் ஆக்ரோத்தைக் கிளற அதற்குப் பொலிஸும் அரச காவலர்களும் துணை நின்றார்கள். இப்படியான வருந்தத்தக்க செய்திகள்தான் இன உறவுகளை 1970 களில் இருந்து 1088 வரை பாதித்தன. இணங்கி போதல் என்பது பெரும்பான்மையின் நோக்கமாக இருக்கவில்லை.


ஜூலை 1978இல் அரசாங்கம் யாழ்ப்பாணத்தில் மட்டும் அவசரகால நிலையைப் பிறப்பித்தது. அதன் மற்ற சரத்துகளுக்கிடையே இறந்தவர்களின் உடல்களை நீதிவானின் பார்வையில்லாமல் புதைக்கலாம் என்பதும் இருந்தது. அவசர கால நிலைமையும் இந்த சரத்துக்களும் பிறப்பிக்கப்பட்ட அந்த இரவிலேயே யாழ்ப்பாணத்தில் ஆறு இளைஞர்கள் மிக மர்மமான முறையில் மாயமானார்கள். இரண்டு இளைஞர்களின் உடல்கள் - இன்பம், செல்வரத்தினம்(செல்வம்) ஆகிய இருவரது சடலங்கள் - அவர்களின் வீடுகளிலிருந்து பல மைல்களுக்கு அப்பால் காணப்பட்டன. அவற்றில் இருந்த கொடூரம் மலைக்க வைத்தது. அவர்களது தலைகள் அடித்து நொறுக்கப்பட்டு மூளைகள் தோண்டி எடுக்கப்பட்டிருந்தன. அவற்றோடு மூளகளுக்குள் சுட்டுச் செலுத்தப்பட்ட ரவைகளும் தோண்டி எடுக்கப்பட்டு இருந்தன. மறைந்துபோன மற்றவர்களின் உடல்கள் கிடைக்கவில்லை.

செல்வரத்தினம், இன்பத்தினது படங்களுடன் அமிர்தலிங்கம் ஜனாதிபதி ஜே. ஆருக்கு வலுவான வார்த்தைகள் அடங்கிய கடிதத்தை அனுப்பியிருந்தார். இடையில் இச்சம்பவம் பற்றிய விவரங்களும், படங்களும் சர்வதேசத்தை சென்று சேர்ந்தமையால் சர்வதேச அழுத்தங்களைத் தாங்கமுடியாமல் ஜனாதிபதி நாடாளுமன்றத்தின் குழு ஒன்றை லலித் அத்துலத் முதலி தலைமையில் அமைத்தார். அந்த குழுவுக்கு மறைந்த இந்த ஆறு பேரைப் பற்றி ஆராயப் பணிக்கப்பட்டது. நாடாளுமன்றக் குழு ஒரு விசாரணைக் குழுவாக இயங்க முடியாது. அவர்களோடு அனுபவமுள்ள விசாரணை அதிகாரிகள் இணைக்கப்பட மாட்டார்கள். பொலிஸுக்கு எதிரான குற்றங்களாக இருந்தமையால் அவர்களோடு சேர்ந்து உண்மையை வெளிக்கொணர முடியாது. எப்படியாயினும், இந்தக் குழு தங்களால் ஆராய கூடியதாக இருந்த சாட்சியங்களின்படி காணாமல் ஆக்கப்பட்ட நான்கு பேரில் இருவர் இறந்த போது பொலிஸாரின் கைகளிலேயே - சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்திலேயே - இருந்தனர் என்ற ஏகமனதான தீர்மானத்துக்கு வந்தது. இதைப்பற்றித் தொடர்ந்து விசாரிக்கப்பட வேண்டும் எனக் கூறப்பட்டாலும், விசாரணைக் குழுவின் தலைவராக அப்போதைய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலியே இருந்தமையால் எதுவுமே நடக்கவில்லை.

சர்வதேச அழுத்தங்களை அடுத்து மேற்படி அவசரகால சரத்துக்கள் நீக்கப்பட்டு, பின்1983 - 84 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில்மீளக்கொண்டுவரப்பட்டன. அவை அரச படைகளுக்கு ஆள்களைக் கொல்லுவதற்கு கொடுக்கப்பட்ட அதிகாரம் அது என்பதை பின்பு நடந்த பல்வேறு சம்பவங்களால் நினைவு கூரலாம்.

இவற்றின் தாக்கங்கள் பிறந்தவை தான் விடுதலை இயக்கங்கள். அரசாங்கம் அவர்களைப் பயங்கரவாதிகள் என்று கூறலாம். ஒரு நாய்க்குப் பெயர் ஒன்றைக் கொடுத்து அதனைத் தூக்கிலிடலாம். ஆனால் அது ஒரு காலமும் பிரச்சினையை தீர்க்கப் போவதில்லை.

விடுதலையைப் பெற்று விட வேண்டும் என்ற நோக்கத்தில் அவர்கள் ஆயுதப் போராட்டங்களில் ஈடுபட்டார்கள். நீதியையும் சமாதானத்தையும் அடைவதற்கு வேறு வழிகள் இல்லை என்பதும், அதுவே அரச பயங்கரவாதத்திற்குப் பதில் என்பதும் அவர்களின் எண்ணம். தமிழ் அரசியல் தலைவர்கள் இவர்களை ஊக்குவிக்கிறார்கள் என்றும், கட்டுப்படுத்தவில்



சிவகுமாரன்

லை என்றும் அரசும் பேரினவாதமும் எப்பொழுதுமே குற்றஞ்சாட்டின. ஆனால் அவர்கள் தங்களது கைகளை, எண்ணங்களைப் பார்ப்பதில்லை

மகாத்மா காந்தி வன்முறை போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பகத்சிங் பற்றி பேசும்போது "அவன், ஒரு மனிதன் தரக் கூடிய எல்லையற்ற தியாகத்தை நாம் எல்லோரும் நம்புகிற - விரும்புகிற - சுதந்திரத்திற்காக அர்ப்பணித்துள்ளான்" - என்றார்.

இதைச் சுட்டிக்காட்டி தமிழ் மக்கள் குட்டிமணி, ஜெகன், தங்கத்துரை, சிவகுமாரன், பிரபாகரன், கிட்டு போன்றோர் பற்றி பேசினால் சிங்களப் பேரினவாதிகளின் முகங்கள் சிவந்து, 'அவர்கள் பயங்கரவாதிகள், அவர்களால்தான் நாடு நாச



கிட்டு

மாகிப் போனது' என்பார்கள்.

இன்றையகாலிமுகத்திடலின்உணர்வுகளைக் காணும் பொழுது, தமிழ் மக்கள் அவர்களை தங்களது விடுதலை வீரர்களாக ஏற்றுக் கொண்டமை போல, சிங்களப் பேரினவாதமும் ஒரு பொறுப்புணர்வுடன் ஏற்றுக்கொள்ளுமா என்ற கேள்விகள் உண்டு.

பேரினவாதம் புரையோடிப் போயுள்ள இனத்துடன் எந்தவித இணக்கப்பாட்டுப் பேச்சுக்களும் சரி வரப்போவதில்லை. அவற்றை சம்பந்தன் முன்னெடுத்தால் என்ன, சுமந்திரன், நீதியரசர் விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார் தூண்டினால் என்ன, எதுவுமே எந்த விதத் தீர்வும் தந்துவிடப் போவதில்லை. ஏனெனில் அவர்களிடையே நல்லெண்ணவாதிகள் சிலர் இருந்தாலும், பேரினவாத சாகரத்தில் அந்த நல்லெண்ணம் அமிழ்ந்து போகும்.

போர் நடந்துகொண்டிருந்தபோது நோர்வேயின் நல்லெண்ணப் பேச்சுகள் நடந்தன. அதில் அமைச்சர் ஜீ.எல். பீரிஸும், விடுதலைப் புலிகளின் பாலசிங்கமும் கூட்டாட்சி அடிப்படையில் இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பது என ஒத்துக் கொண்டார்கள். பின்னர் இதுவே மஹிந்தவினால் அறுக்கப்பட்டு, விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டார்கள்.

ஏனெனில் அப்படியான ஒழுங்குகளை ஏற்று, இணைந்து - இணங்கி - வாழும் எண்ணம் அவர்களுக்கு இல்லவே இல்லை.

ரணில் தனது பொருளாதார மீட்சித் திட்டங்களுக்கு கால அவகாசம் வேண்டும் என்பதால் இன்னுமொரு பேச்சுவார்த்தையைப் புரட்டுகிறார். அவரது வெளியுறவுமந்திரியும்கூட, நோர்வேயில் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுக் கூட்டாட்சியைக் கேட்டுக்கொண்ட ஜி.எல்.பீரிஸ் தான். ஆகவே முதலில் இருந்து தொடங்காமல் ஒத்துக்கொண்ட இந்த இடத்திலிருந்து முன்னேறுவார்களா என்பதே முக்கியம்.

(வளரும்...)



தங்கத்துரை - குட்டிமணி

# உணவுப்பொருள்களுக்கான தட்டுப்பாடு மத்திய வங்கியின் கட்டுப்பாட்டால் ஏற்படும்

## அஸாத் ஸாலி கருத்து



குறிப்பிட்ட சில உணவுப் பொருள்களுக்கான மத்திய வங்கியின் கட்டுப்பாடு நாட்டில் உணவு தட்டுப்பாட்டுக்கு வழி வகுக்கும் அபாயம் இருக்கின்றது. அதனால் மத்திய வங்கியின் தட்டுப்பாடு தொடர்பாக கவனம் செலுத்தி அதனைத் தளர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அஸாத் ஸாலி தெரிவித்துள்ளார்.

இலங்கை மத்திய வங்கியால் ஒருசில இறக்குமதிசெய்யப்படும் பொருள்களுக்கு விதித்திருக்கும் கட்டுப்பாடு தொடர்பாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

குறித்த சிலவகை இறக்குமதிகள் தொடர்பில் இலங்கை மத்திய வங்கியால் விதிக்கப்பட்டிருக்கும் கட்டுப்பாடுகள் தொடர்பாக வியாபாரிகள் சிலர் எனது கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கின்றார்கள். தற்போது நாம் முகங்கொடுத்திருக்கும் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு இறுக்கமான நாணயக்கொள்கை அவசியமாகும். இருப்பினும் திறந்த கணக்கு, பெற்றுக்கொண்டமைக்கான பத்திரம், கட்டணம் செலுத்தியமைக்கான பத்திரம் போன்றவற்றின் மீதான கட்டுப்பாடுகள் எதிர்வரும் சில நாள்களில் உணவுப்பொருள்களுக்கான தட்டுப்பாட்டைத் தோற்றுவிக்கும்.

எனவே மேலே குறிப்பிட்டுள்ள விடயம் தொடர்பில் அவதானம் செலுத்துமாறும், அத்தியாவசியப்பொருளாகக் கருதப்படும் உணவுப்பொருள்கள் தொடர்பான தளர்த்தப்பட்ட கட்டுப்பாடுகளை அனுமதிக்குமாறு அனைத்துவங்கிகளுக்கும் அறிவுறுத்தும்படி மத்திய வங்கியிடம் கேட்டுக்கொள்ளுமாறும் உங்களை வலியுறுத்துகின்றேன். இது மிகக்குறுகிய காலத்தில் சந்தையில் உணவுப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படுவதைத் தடுக்கும்.

இந்த விடயம் தொடர்பில் நீங்கள் அவதானம் செலுத்துவது பெரிதும் வரவேற்கத்தக்கதாகும். – என்று தெரிவித்தார்.



# 3 லட்சம் யூரோ பெறுமதியான மருந்துகளை நன்கொடையாக வழங்கியுள்ளது பிரான்ஸ்!

நாட்டில் நிலவும் மருந்து தட்டுப்பாட்டைக் கருத்திற் கொண்டு 3லட்சம் யூரோ பெறுமதியுடைய மருந்துகளை பிரான்ஸ் நன்கொடையாக வழங்கியுள்ளது.

இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் எரிக் லெவாடு மற்றும் சுகாதாரத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல ஆகியோருக்கிடையிலான சந்திப்பு 26 ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெற்ற போதே குறித்த மருந்து தொகை கையளிக்கப்பட்டது.

இதன் போது இலங்கையின் சுகாதார சேவைக்குத் தேவையான 3 லட்சம் யூரோ பெறுமதியுடைய அத்தியாவசிய மருந்துகள் பிரான்ஸால் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளன.

சுவாச நோய் மற்றும் மயக்க மருந்து என்பனவே இவ்வாறு நன்கொடையாக வழங்கப்பட்டன. நெருக்கடியான நிலைமையில் இலங்கைக்கு உதவ முடிந்தமை தொடர்பில் மகிழ்ச்சியடைகிறேன் என பிரான்ஸ் தூதுவர் இதன் போது தெரிவித்தார்.

எதிர்காலத்திலும் இவ்வாறான ஒத்துழைப்புக்களை வழங்க எதிர்பார்த்துள்ளேன் எனவும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் சுகாதார சேவையை வழமையைப் போன்று முன்னெடுத்துச் செல்வதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன எனவும், அதற்கு தேவையான மாற்று நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார மற்றும் நிதி நெருக்கடிக்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன எனவும், விநியோகத் துறைக்கு இடையூறு ஏற்படாத வகையிலான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன எனவும் அமைச்சர் இதன் போது தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# அச்சுவேலி எரிபொருள்நிரப்பு நிலையத்தில் பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது!

## அதற்குப் பலரும் பாராட்டு

நாட்டில் எரிபொருளைப் பெற்றுக்கொள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருக்கின்றனர்.

எரிபொருள் நெருக்கடி காரணமாக குறிப்பாக மோட்டார் சைக்கிளிற்கான பெற்றோலை பெற்றுக் கொள்வதற்கு மக்கள் பல மணித்தியாலங்கள் காத்திருப்பதை அவதானிக்க முடிகிறது.

மக்களுக்கு இலகுவாக எரிபொருளை வழங்கும் நோக்குடன் அச்சுவேலியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெண்களின் வேலைப்பளுவைக் கருத்தில்கொண்டு அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. மேற்படி எரிபொருள் நிரப்பும் நிலையத்திலேயே நீண்ட வரிசையில் ஆண்களும் பெண்களும் பெற்றோலை பெறுவதற்கு காத்திருந்த வேளை பெண்களை தனியாக வரிசைப்படுத்தி அவர்களுக்கான எரிபொருள் துரிதமாக வழங்கப்பட்டது.

இவ்வாறு பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதை எவரும் தவறுதலாக பயன்படுத்தி தமது தேவைக்கு அதிகமாக எரிபொருளை சேமிக்க வேண்டாம் எனவும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இந்த முன்மாதிரியான செயற்பாட்டினால் எரிபொருளை பெற வந்த பலரும் அச்சுவேலி எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு பாராட்டுகளை தெரிவித்து வருகின்றனர்.

# ஆஸ்திரேலியா இலங்கை மாணவர் கல்வி நிதியம் மாணவர்களுக்கான நிதிக்கொடுப்பனவு அதிகரிப்பு!







ஆஸ்திரேலியாவிலிருந்து கடந்த 34 வருடகாலமாக இயங்கிவரும் தன்னார்வத் தொண்டு நிறுவனமான இலங்கை மாணவர் கல்வி நிதியம், இவ்வாண்டு முதல், உதவியைப் பெற்றுவரும் மாணவர்களின் நிதிகொடுப்பனவை அதிகரித்துள்ளது.

இலங்கையில் நீடித்த போரால் பெரிதும் பாதிக்கப்பட்ட ஏழைத் தமிழ் மாணவர்களுக்கு கடந்த 1988 ஆம் ஆண்டு முதல் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஊடாக உதவி வரும் இலங்கை மாணவர் கல்வி நிதியம், போர் முடிவுற்ற பின்னர் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்களையும் தெரிவுசெய்து உதவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆஸ்திரேலியாவில் வதியும் மனிதநேயம் மிக்க அன்பர்களின் ஆதரவால் இயங்கிவரும் இலங்கை மாணவர் கல்வி நிதியம், இலங்கையில் யாழ்ப்பாணம் சிறுவர் அபிவிருத்தி நிலையம், வவுனியா நலிவுற்ற சமூக அபிவிருத்திக்கான தன்னார்வ அமைப்பு, மலையக சமூக அபிவிருத்தி நிறுவனம் மற்றும் கம்பஹா மாவட்டத்தில் விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி ஆகியனவற்றின் ஊடாக மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவி வருகின்றது.

இந்த உதவியின் மூலம் யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, திருகோணமலை, மட்டக்களப்பு, கம்பஹா, மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களும் மலையகத்தில் நுவரெலியா மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்களும் பயனடைந்து வருகின்றனர்.

இலங்கையில் சமகாலத்தில் தோன்றியிருக்கும் பொருளாதார நெருக்கடி – வாழ்க்கைச் செலவு – விலைவாசி உயர்வு முதலானவற்றைக் கவனத்தில் கொண்டு இந்த வருடம் (2022) ஜனவரி மாதம் முதல் கல்வி நிதியத்தின் உதவியைப் பெறும் மாணவர்களுக்கு ஒவ்வொரு மாதமும் மூவாயிரம் ரூபா வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் மேற்குறிப்பிட்ட அமைப்புகளின் ஊடாக மாணவர்களுக்கு 2022 ஜூன் மாதம் வரைக்குமான நிதியுதவி முதற்கட்டமாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

ஓவியர் (அமரர்) கே.ரி. செல்வத்துரை ஞாபகார்த்த நிதியுதவி இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் இலட்சினையை 1988 ஆம் ஆண்டில் வரைந்து வழங்கியவரும் பிரபல ஓவியருமான (அமரர்) கே.ரி. செல்வத்துரை அவர்களின் ஞாபகார்த்தமாக அன்னாரின் குடும்பத்தினர் வழங்கிய 10 லட்சம் ரூபா, யாழ். சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் ஊடாக வங்கியில் நிரந்தர வைப்பிலிடப்பட்டு அதிலிருந்து கிடைக்கும் வட்டிப்பணத்திலிருந்தும் சில மாணவர்களுக்குரிய நிதிக்கொடுப்பனவு வழங்கப்படுகிறது.

இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் ஆதரவாளரான அன்பர் சோமசுந்தரம் பாலசந்திரன் வழங்கிய உதவியின் மூலம் யாழ். மாவட்டத்தில் கல்வி நிதியத்தின் உதவியைப்பெறும் மாணவர்களின் குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொருள்களும் அண்மையில் வழங்கப்பட்டன.

கடந்த ஆண்டும் கல்வி நிதியத்தின் ஆதரவுடன் வடக்கு, கிழக்கு மலையகம் உட்பட பல பிரதேசங்களில் உலர் உணவுப் பொருள்கள் மாணவர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன.

# ரணில் பதவியேற்காதுவிட்டால் கோட்டா பதவி விலகியிருப்பார்!

## முஜிபுர் ரஹ்மான் கருத்து

பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றிருக்காவிட்டால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகியிருப்பார். நாட்டில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டு புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டு சர்வதேச உதவிகளும் கிடைக்கப் பெற்றிருக்கும்.

இவர் பதவியேற்றதன் காரணமாகவே ஜனாதிபதியின் பதவி விலகல் தீர்மானம் தாமதமடைந்தது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் -

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதவியேற்ற நாள் முதல் நாட்டின் பொருளாதார நிலைமை தொடர்பில் தெளிவுபடுத்திக் கொண்டிருக்கின்றாரே தவிர , நெருக்களிலிருந்து மீள்வதற்கான எந்தவொரு தீர்வையும் முன்வைக்கவில்லை.

மக்களின் நலனுக்காக இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதாக்க கூறிய அவர் 20 இற்கும் அதிக அமைச்சர்களை நியமித்திருக்கின்றார். அவர்கள் அனைவரும் உத்தியோகபூர்வ இல்லங்களிலேயே வசிக்கின்றனர். அதற்கான செலவுகளை அரசாங்கமே செய்து கொண்டிருக்கிறது.

முன்னர் பதவி வகித்த அதே நபர்களுக்கு அமைச்சு பதவியை வழங்கி , பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வேறொரு அரசியல் பாதையில் பயணித்துக் கொண்டிருக்கின்றார்.

மாறாக மக்கள் நலனுக்காக எதனையும் செய்யவில்லை. பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றிருக்காவிட்டால் நெருக்கடிகளை எதிர்கொள்ள முடியாமல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகியிருப்பார்.

நாட்டில் பாரியதொரு மாற்றம் ஏற்பட்டு புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டு , சர்வதேச உதவிகளும் கிடைக்கப் பெற்றிருக்கும்.

ஆனால் ரணில் விக்கிரமசிங்கவின் பதவியேற்பால் ஜனாதிபதியின் பதவி விலகல் தாமதமடைந்துள்ளது. தலைமறைவாகியிருந்த முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ ஆகியோர் வெளியில் வந்துள்ளனர்.

வெளிநாட்டுக்கு தப்பிச் சென்றிருந்த யோஷித ராஜபக்ஷவும் மீண்டும் நாடு திரும்பியுள்ளார். இவை அனைத்துக்கும் காரணம் ரணில் விக்கிரமசிங்கவே. நாடு மேலும் வீழ்ச்சியடைந்து செல்வதற்கு அவரே பொறுப்பு கூற வேண்டும். - என்றார்.

# பாண் 400 ரூபா, பெற்றோல் 600 ரூபா வரையும் விலைகள் எகிறும் வாய்ப்புகள்!

## பணத்தை அச்சிட வேண்டாமென பிரதமரிடம் மரிக்கார் கோரிக்கை

நாட்டில் தற்போதுள்ள பண வீக்கத்துக்கு மத்தியில் மீண்டும் மீண்டும் பணத்தை அச்சிடுவதால் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு, தள்ளுவண்டியில் பணத்தை கொண்டு செல்ல வேண்டிய நிலைமையே ஏற்படும்.

பாணின் விலை 400 ரூபா வரை உயர்வடையும். எனவே பணத்தை அச்சிடுவதற்குப் பதிலாக தனியார் நிறுவனங்கள் அரச வங்கிகளுக்கு செலுத்த வேண்டிய கடனை மீளப்பெறுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் பிரதமரிடம் வலியுறுத்தியுள்ளார்.

ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

நாட்டை நிர்வகிப்பதற்கும் , அரச உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் வழங்குவதற்காகவும் மேலும் ஒரு லட்சம் கோடி ரூபா பணம் அச்சிடப்படவுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

ஒரு ரிரில்லியன் என்பது ஒரு இலட்சம் கோடி ரூபாவாகும். இவ்வாறு பணத்தை அச்சிட வேண்டாம் என்று பிரதமரிடம் கோருகின்றோம்.

இந்த தொகை பணம் அச்சிடப்பட்டால் பாண் இறாத்தலொன்றின் விலை 400 ரூபா வரையும் , பால்மா பக்கெட்டின் விலை 1000 ரூபா வரையும், பெற்றோல் லீற்றரொன்றின் விலை 600 ரூபா வரையும், சமையல் எரிவாயு சிலிண்டரொன்றின் விலை 10 ஆயிரம் ரூபா வரையும் உயர்வடையக் கூடும்.

இவ்வாறான நிலைமை ஏற்பட்டால் சுய தொழில் செய்வோருக்கும், தனியார் துறையினருக்கும், சிறு தொழில்களில் ஈடுபடுவோருக்கும், அன்றாடம் உழைத்து உண்போருக்கும் வாழ முடியாத சூழல் ஏற்படும்.

இவர்களுக்கு 3 வேளையும் உண்ண முடியாத நிலைமையும் ஏற்படும். சர்வதேசத்திடமிருந்து நிதியுதவிகள் கிடைக்கப் பெறும் வரை இவ்வாறு பணத்தை அச்சிட்டு பண வீக்கத்தை அதிகரிக்காமல், மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கிக்கு கடன் செலுத்த வேண்டியுள்ள தனியார் நிறுவனங்களிடமிருந்து பணத்தைப் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்துகின்றோம்.

மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கி என்பவற்றுக்கு சில தனியார் நிறுவனங்களால் சுமார் 9 ஆயிரம் மில்லியன் ரூபா செலுத்தப்பட வேண்டியுள்ளது.

அந்தநிறுவனங்களிடமிருந்து குறித்தபணத்தொகையைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறில்லை எனில் அத்தியாவசியப் பொருள்களுக்கான வரிசைகள் மேலும் அதிகரிக்கும்.

பணம் இருந்தாலும் பொருள்களைக் கொள்வனவு செய்ய முடியாத நிலைமை ஏற்படும். பொருள்களின் விலைகள் வானளவு உயர்வடையும். பணவீக்கத்தை அதிகரித்து பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக தள்ளுவண்டியில் பணத்தைக் கொண்டு செல்ல வேண்டிய நிலைமையை ஏற்படுத்தி விட வேண்டாம் என்று பிரதமரிடம் கேட்டுக்கொள்கின்றோம். - என்றார்.

# போக்குவரத்து நெரிசல் காரணமாக நாளாந்தம் 40 முதல் 50 கோடி ரூபாவரை நாட்டுக்கு நட்டம்!

கொழும்பில் ஏற்படும் போக்குவரத்து நெரிசல் காரணமாக நாளாந்தம் 40 முதல் 50 கோடி ரூபா வரை நாட்டுக்கு நட்டம் ஏற்படுவதாகத் தெரியவந்துள்ளது.

மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் போக்குவரத்து மற்றும் விநியோக முகாமைத்துவ பிரிவின் சிரேஷ்ட பேராசிரியர் அமல் குமாரகே இதனைத் தெரிவித்துள்ளார்.

போக்குவரத்து நெரிசல் காரணமாக எரிபொருள் விரயம், மற்றும் உழைக்கும் மக்கள் வேலை செய்யும் வீதிகளை மறிப்பதானது ஒரு நாடு என்ற ரீதியில் தாங்க முடியாத பொருளாதார இழப்பாகும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்த வாகனங்கள் நாடாளுமன்ற வீதி, கண்டி வீதி, காலி வீதி, ஹைலெவல் வீதி, ஹொரண வீதி, தெமட்டகொட - வெல்லம்பிட்டிய வீதி, நாவல - நாரஹேன்பிட்டி வீதி, ஒருகொடவத்தை - அம்பத்தளை வீதி, கீரிமண்டல மாவத்தை, ஹெக்கிட்டா -மட்டக்குளிய வீதி, லோலெவல் ஆகியவற்றின் ஊடாகக் கொழும்பு நகருக்குள் பிரவேசிக்கின்றன.

இவற்றில் பெரும்பாலான வாகனங்கள் காலி வீதி, கண்டி வீதி, நீர்கொழும்பு வீதி மற்றும் ஹைலெவல் வீதி வழியாக கொழும்புக்குள் பிரவேசிக்கின்றன.

மோட்டார் சைக்கிள்கள் உட்பட சுமார் 9 லட்சம் வாகனங்கள் இந்த வீதிகள் ஊடாக நாளாந்தம் கொழும்புக்குள் பிரவேசிக்கின்றன எனவும் தெரியவந்துள்ளது.

இதில் 3 லட்சத்து 14 ஆயிரத்து 231 கார்கள் மற்றும் ஜீப்கள், 2 லட்சத்து 40 ஆயிரத்து 756 ஓட்டோக்கள், 2 லட்சத்து 11 ஆயிரத்து 320 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் 28 ஆயிரத்து 989 வான்களும் உள்ளடங்குகின்றன.

நாளாந்தம் கொழும்புக்குள் நுழையும் பஸ்களின் எண்ணிக்கை 26 ஆயிரத்து 634 ஆகவும் பதிவாகுகின்றன.

நாளாந்தம் கொழும்பு நகருக்குள் இவ்வளவு வாகனங்கள் பிரவேசித்தாலும் அங்கு வரும் மக்களின் எண்ணிக்கை 19 லட்சத்தை அண்மித்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இதன்படி, இருவர் பயணிக்கும் வகையில் ஒரு வாகனம் கொழும்பிற்குள் நுழைவதே போக்குவரத்து நெரிசலுக்கு முக்கிய காரணம் என்பது தெளிவாகிறது.

# ஹெரோயின் வைத்திருந்த இளம் தாய் ஒருவர் கைது!



பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களால் வீதியொன்றுக்கு அருகில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின் போது இளம் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பெண்ணிடம் இருந்து ஹெரோயின் போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த யுவதியிடம் இருந்து 19 கிராம் ஹெரோயின் இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளது.

தென் மாகாணத்தின் முன்னணி போதைப்பொருள் கடத்தல்காரர் ஒருவரின் போதைப்பொருள்களை இவ்வளவு காலமாக இந்த யுவதி விநியோகித்து வந்துள்ளார் என்பதும் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்படும் போது, அவர் சுமார் 5 லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப்பொருளை வைத்திருந்த நிலையில், ஒரு பொட்டலத்தை தலா 25 ஆயிரம் ரூபாவிற்கு விற்பனை செய்தார் எனவும் அவர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

மேலதிக விசாரணையில் அவர் ஈஸி காஷ் முறையில் ஹெரோயின் விநியோகத்தில் ஈடுபட்டது தெரியவந்தது. கைது செய்யப்பட்ட சந்தேகநபர் 28 வயதான இரண்டு பிள்ளைகளின் தாயாவார்.

அவர் பலப்பிட்டிய நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

# ஐ.ரி.என். ஊடக வலையமைப்பின் தலைவரும் இராஜினாமாச் செய்தார்!



சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பின் தலைவர் நிரோஷான் பிரேமரத்ன தனது ராஜினாமாகடிதத்தைகையளித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சுயாதீன தொலைக்காட்சியின் ஊடகவியலாளராக தனது ஊடக வாழ்க்கையை ஆரம்பித்த நிரோன் பிரேமரத்ன செய்தி தயாரிப்பாளராகவும், அறிவிப்பாளராகவும் செயற்பட்டார்.

சிறந்த செய்தி வாசிப்பிற்கான விருதையும் இவர் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது

# பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் இருவருக்கு அதிரடி இடமாற்றம்

உடன் அமுலாகும் வகையில் இரண்டு சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர்கள் இடமாற்றப்பட்டுள்ளனர்.

அதன்படி, குற்றவியல் மற்றும் போக்குவரத்து பிரிவின் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தென் மாகாணத்துக்குப் இடமாற்றப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதேபோல், தென் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் ராஜித்த ஸ்ரீ தமிந்த கிழக்கு மாகாணத்திற்கு இடமாற்றப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# அரச வங்கிகளின் பங்குகளை விற்பனை செய்ய அரசு திட்டம்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் முன்வைக்கப்படவுள்ளதாகக் கூறப்படும் புதிய வரவு - செலவுத் திட்ட யோசனையின் ஊடாக நாட்டின் வளங்கள் விற்பனை செய்யப்படவுள்ளன எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே.டி லால்காந்த இதனைத் தெரிவித்துள்ளார். மக்கள் விடுதலை முன்னணியின் ஏற்பாட்டில் நடைபெற்ற பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேற்படி வளங்களை விற்பனை செய்வதன் மூலம் நாட்டுக்கு எரிபொருளை பெற்றுக்கொள்ள அரசாங்கம் முயற்சித்து வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கியின் பங்குகளை விற்பனை செய்து டொலர்களை ஈட்ட அரசாங்கம் ஏற்கனவே திட்டமிட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551A கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.05.2022இல் வெளியிடப்பெற்றது.